ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



ஏப்ரல் — 1981
சித்திரை

	ரூ. பை
ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருடைய சீடர்களும்	12 50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	3 00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் கதாமிருதம் (முதல் பாகம்)	8 00
(இரண்டாம் பாகம்)	8 00
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	8 00
ஸ்ரீராமகிருஷ்ண உபநிஷதம்	1 50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்	3 50
குருதேவர் வாக்கியம்	1 25
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கதை	0 35
ஸ்ரீ சாரதாதேவியார் அவரது வரலாறும் திருவாக்கும்	*(அச்சில்)*
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	1 50
சுவாமி விவேகானந்தர் (ரா. கணபதி) சாதா பைண்டு	12 00
காலிகோ பைண்டு	16 00
ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்	4 00
சிறுவர்களது விவேகானந்தர்	2 00
விவேகானந்தர் (மூவர்ணப் படங்களுடன்)	2 50
சுவாமி விவேகானந்தரின் சம்பாஷணைகள்	6 00
,, ,, காலிகோ	7 00
இந்தியப் பிரசங்கங்கள் (காலிகோ)	6 00
கருமயோகம்	2 00
பக்தியோகம்	1 50
இராஜயோக உரைகள்	2 50
நமது தாய்நாடு	2 00

	ரூ. பை
கல்வி	2 50
பாரதப் பெண்மணிகள்	2 50
தற்கால இந்தியா	1 00
சிகாகோ பிரசங்கம்	1 00
எனது வாழ்வும் பணியும்	0 85
எனது போர்முறை	0 75
எனது குருநாதர்	1 25
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0 60
விவேகானந்தர் பாதையிலே...	0 50
ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3 00
சுவாமி இராமகிருஷ்ணானந்தர்	3 50
மகான் துர்க்காசரண நாகர்	1 50
திரு அருள்மொழி	6 00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3 00
இந்துமத ஸாரம்	3 00
பக்தி ஸாரம்	2 25
பக்தி மார்க்கம்	1 00
நாரதர் கலகம்	4 75
கடோபநிஷதம் (நாடகம்)	2 00
ப்ரச்னோபநிஷதம் (நாடகம்)	2 00
வேதாந்த ஸாரம்	2 00
பஜனாவளி	5 00
ஆத்ம நிவேதனம்	2 00
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞானமுரசு	0 80
ஸ்ரீ சாரதாதேவியாரின் அன்புமுரசு	0 80
ஸ்ரீ விவேகானந்தரின் வீரமுரசு	0 80
ஸ்ரீ கிருஷ்ணரின் யோகமுரசு	0 80
ஸ்ரீ சங்கரரின் வேதாந்த முரசு	0 80
புத்தரின் அற முரசு	0 80
இயேசு கிறிஸ்துவின் அருள்முரசு	0 80

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப்பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேத பாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல்சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறுபேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருஹஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீசர்,

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61 | ஏப்ரல் — 1981 | இதழ் 4

பொருளடக்கம்

1. பிரார்த்தனை ... 157
2. ஸ்ரீராமபக்த ஹனுமான் — விஜயதீபம் ... 158
3. ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள்வாக்கு ... 161
4. புதிய உலகத்தைப் படைப்போம் — ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் ... 163
5. பிரதோஷ விரதம் — ராஜம் ஐயராமன் ... 168
6. சிறுவர் பகுதி : சுதிட்சண முனிவர் — கோமதி ராஜாங்கம் ... 170
7. சரணுகதி — அலங்காரம் தேவராஜன் ... 172
8. தியானவேளையிலே . . . — எப். ஜே. அலெக்சாண்டர் ... 174
9. இந்தியா குடிசைகளில் வாழ்கிறது — சுவாமி விவேகானந்தர் ... 176
10. அருள்நெறிக் கதை; ஜாம்பவான் — நரேந்திரன் ... 178
11. ஸ்ரீராமபிரானின் அருளுரை — சுவாமி கமலாத்மானந்தர் ... 180
12. நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனம் — மாண்புமிகு எம். ஜி. ராமசந்திரன் ... 182
13. சுவாமி பிரேமானந்தரின் போதனைகள் — ... 187
14. சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் விசேஷ தினங்கள் ... 189

ஸ்ரீராமகிருஷ்ண மடம்

சென்னை - 600 004

1981 ஏப்ரல், மே, ஜூன் மாத நிகழ்ச்சிகள்

சத் சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (5, 26 ஏப்ரல் & 17 மே & 7, 21 ஜூன்)
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (19 ஏப்ரல் & 3 மே & 14, 28 ஜூன்)

1. ஸ்ரீமத் பாகவதம் — திரு 'அண்ணா' (5 ஏப்ரல் & 3 மே & 7 ஜூன்)
2. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் — திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (19 ஏப்ரல், 17 மே, 14 ஜூன்)
3. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்— திரு வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள் (26 ஏப்ரல், 31 மே, 21 ஜூன்)
4. ஸ்ரீ ஆஞ்சனேயர் — திரு ஆர். கோதண்டராமன் (28 ஜூன்)

மாலை 5 - 35 முதல் 6 - 30 வரை சுவாமி கபீரானந்தர் அவர்கள் **பக்தி ரத்னாவளி** என்ற தலைப்பில் ஏப்ரல், மே ஜூன் மாதங்களிலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5 - 30 மணிக்கு)

1.	திங்கள்	**ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்** — சுவாமி அமிர்தானந்தர்
2.	செவ்வாய்	**கர்மயோகம்** — சுவாமி கபீரானந்தர்
3.	புதன்	**தைத்திரீய உபநிஷதம்** — சுவாமி அமலாத்மானந்தர்
4.	வியாழன்	**விவேகசூடாமணி** — 'அண்ணா' சுப்ரமண்யம்
5.	வெள்ளி	**நாமாவளி** — சுவாமி கமலாத்மானந்தர்
6.	சனி	(4 ஏப்ரல், 2 மே, 6 ஜூன் மட்டும்) **அத்யாத்ம ராமாயணம்** — ஜஸ்டிஸ் டி. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். (ரிடையர்டு)
7.	சனி	(11 ஏப்ரல், 9, மே, 13 ஜூன் மட்டும்) **ஸ்ரீஆஞ்சனேயர்** — ஆர். கோதண்டராமன்

முக்கியக் குறிப்பு : இந்தப் பக்கத்தில் இடம்பெறாத 'சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் விசேஷ தினங்கள்' என்ற தலைப்பில் இந்த இதழில் இடம் பெற்றுள்ள 1981 ஏப்ரல், மே, ஜூன் மாத நிகழ்ச்சிகளும் மடத்தில் நடைபெறும்.

வேறு சில நிகழ்ச்சிகள் :

10-5-81 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் 5-30 வரை குலதெய்வம் ராஜகோபால் அவர்களால் **விவேகானந்தர்** என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு கலைநிகழ்ச்சி நடைபெறும்.

மாதந்தோறும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 - 30 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம பாராயணமும், 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார்கள். இடம் : 18, 9 - ஆவது லேன், சாஸ்திரி நகர், சென்னை.

மாதந்தோறும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5 - 30 மணிக்கு **ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்** என்ற தலைப்பில் சுவாமி கீர்த்திதானந்தர் அவர்கள் உரை நிகழ்த்துவார். இடம் : 7, கெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.

மாதந்தோறும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேலூர் ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்த மன்றத்தில் காலை 10 - 30 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதை என்ற தலைப்பில் சுவாமி ராகவேசானந்தர் உரை நிகழ்த்துவார்.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் ஆர்க்காடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றத்தில் மாலை 4 - 30 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதை என்ற தலைப்பில் சுவாமி ராகவேசானந்தர் உரை நிகழ்த்துவார்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி

7 1 2 3 1

தலைவர்,

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 61	துர்மதி ஹு சித்திரை	இதழ் 4

பிரார்த்தனை

कूजन्तं रामरामेति मधुरं मधुराक्षरम् ।
आरुह्य कविताशाखां वन्दे वाल्मीकिकोकिलम् ॥

கூஜந்தம் ராமராமேதி மதுரம் மதுராக்ஷரம் |
ஆருஹ்ய கவிதாசாகாம் வந்தே வால்மீகிகோகிலம் ||

'ராம ராம' என்ற மதுரமான சொல்லை இனிமையாகக் கூவிக்கொண்டு, கவிதை என்ற மரத்தின் கிளைமேல் அமர்ந்திருக்கும் வால்மீகி என்ற கோகிலத்தை வணங்குகிறேன்.

வேதம் மணக்கும் உபநிடத
வீறு மணக்கும் நிஷ்காம்ய

கீதை மணக்கும் சத்சங்கக்
கேண்மை மணக்கும் விலை மதியாய்

போதம் மணக்கும், ஆழ்ந்தகன்ற
பொறுமை மணக்கும் தெய்விகக்

காதல் மணக்கும் பரம ஹம்ஸ
கருணை மலர்ச்சே வடியினையே.

ஸ்ரீராமபக்த ஹனுமான்

ஹனுமார் உண்மையில் சிவபெருமானின் அம்சமாவார். அவர் வாயுவின் மூலமாகக் குரங்குகளின் அரசனுன கேசரியின் மனைவி அஞ்சனுதேவிக்கு மகனுகப் பிறந்தார்.

ஸ்ரீராமபிரான் அவதாரம் செய்தபோது அவருக்குச் சிவபெருமான் தொண்டு செய்ய விரும்பினுர். ஆனுல் சிவசொருபத்துடன் அது இயலாது எனக் கண்டு, தம் பதினேராவது ருத்திர உருவத்தை இவ்விதம் குரங்கு வடிவத்தில் சிவனுர் தோற்றுவித்தார்.

ஹனுமான் பிறந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே ஒரு நாள் உதித்துக்கொண்டிருந்த சூரியனைக் கண்டு, அது ஒரு சிவப்பான பழம் (சிவப் பழம்) என்று நினைத்து, அதை எடுத்து விழுங்கக் கருதி வானத்தை நோக்கித் தாவினுர். அன்றைய தினம் சூரியக்கிரகணமாக இருந்தது. ராகு அனுமானைப் பார்த்தவுடன், 'ஓகோ! வேறு யாரோ ஒருவன் சூரியனைப் பிடிக்க வருகிறுன்' என்று தீர்மானித்து, அவனைப் பிடிக்க வேண்டும் என்ற அவாவுடன் அனுமானை நோக்கித் தாவினுன். அதைக் கண்ட ஆஞ்சனேயர் கோபத்துடன் ராகுவை நோக்கிப் பாயவே, ராகு பயந்துகொண்டு தப்பி ஓடிச் சென்று தேவராஜனுன இந்திரனிடம் முறையிட்டான்.

ஐராவதம் என்ற தன் வெண்ணிற யானை மீது தேவேந்திரன் வருவதை அனுமார் கண்டார். அந்த வெள்ளை யானையை ஏதோ ஒரு வெண்மைப் பழம் என்று நினைத்து அதைப் பிடிக்கத் தாவினுர். உடனே இந்திரன் தன் வஜ்ராயுதத்தால் ஓங்கி ஆஞ்சனேயரை ஓர் அடி அடித்தான். வஜ்ராயுதத்தால் இவரது ஹனுவில் (மோவாய்க்கட்டையில்) அடிபடவே அது சிறிது கோணலாகிவிட்டது. அதனுலேயே இவரது பெயர் ஹனுமான் என்று ஆயிற்று.

வஜ்ராயுதத்தால் அடிபட்ட அனுமார் மூர்ச்சித்து விழுந்துவிட்டார். மகன் மூர்ச்சையுற்று விழுந்ததைக் கண்ட வாயுவிற்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. உடனே தமது போக்கை நிறுத்திவிட்டார். அதனுல் அண்ட சராசரங்களும் மூச்சு விட முடியாமல் திண்டாடின. தேவர்கள்கூட மூச்சுவிட முடியாமல் கஷ்டப்பட்டனர். முடிவில் தேவர் அனைவரும் வந்து அனுமாரை அமரத்துவம் பெறும்படி ஆசீர்வதித்ததுடன், நீர் நெருப்பு காற்று ஆகியவற்ருல் எவ்விதத் தீங்கும் நேரிடாது என்று வாழ்த்தினர். பல வரங்களைத் தந்தனர். அவற்றுள் அஸ்திர சஸ்திரங்களிலிருந்து ஆஞ்சனேயருக்கு மரணம் ஏற்படாது என்பதும் ஒன்ருகும். இத்தகைய வரங்களை ஆஞ்சனேயருக்குத் தந்ததன் மூலம் தேவர்கள் வாயு பகவானை மகிழ்வித்தனர். மகன் எழுந்ததைக் கண்ட வாயு பகவான் தமது போக்கைத் தொடர்ந்தார்.

குரங்காகப் பிறந்ததனுல் அனுமான் சஞ்சல சுபாவத்துடன் காணப்பட்டார். ரிஷிகளின் ஆசிரமங்களுக்குச் சென்று மரங்களை ஒடிப்பதும், ஆசிரமத்திலுள்ள பொருள்களைத் தாறுமாருக வைப்பதும், எடுத்துப்போடுவதுமாக இருந்தார். அதனுல் வெகுண்ட ரிஷிகள் அனுமானைநோக்கி, "நீ உன் பலத்தை மறக்கக்கடவாய்! மற்றவர் உன்னிடம் உன் வலிமையைப் பற்றி எடுத்துக் கூறிய பிறகுதான் உனக்கு உன் பலம் தெரிய வேண்டும்" என்று சபித்துவிட்டனர். அது முதற்கொண்டு ஆஞ்சனேயர் சாதாரணக் குரங்கு போலவே விளங்கத் தொடங்கினுர்.

அஞ்சனையின் ஆலோசனைப்படி அனுமார் சூரியபகவானிடம் சென்று வணங்கி, அவரிடமிருந்து வேதம், வேதாங்கம், சாஸ்திரங்கள், கலைகள் ஆகிய அனைத்தையும் கற்றறிந்தார். எல்லாவற்றையும் கற்றுணர்ந்த பிறகு கிஷ்கிந்தைக்கு வந்து சுக்கிரீவனுடன் வசிக்கத் தொடங்கினுர். சுக்கிரீவன் அனுமாரைத் தன் சொந்த அமைச்சராக ஆக்கிக்கொண்டான். சுக்கிரீவனை வாலி அடித்து விரட்டியவுடன் ஹனுமார் சுக்கிரீவனுடனேயே வந்துவிட்டார்.

சுக்கிரீவனின் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்வதற்காக ரிச்யமுக பர்வதத்தில் வந்து வசிக்கத் தொடங்கினர்.

குழந்தைப் பருவத்திலேயே அனுமான் தாயிடமிருந்து ராமகதையைக் கேட்டிருந்தார். கல்வி கற்கும் காலத்தில் வேதங்களிலும் புராணங்களிலும் ராமகதையைக் கேட்டார். கிஷ்கிந்தை வந்தபோது அவருக்கு அயோத்தியில் பகவான் ஸ்ரீராமர் அவதரித்துள்ளார் என்பது தெரிய வந்தது. அப்போதிலிருந்து ராமரை நேரில் காணப் பேராவல் கொண்டு சமயம் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்.


நினைவில் ராமரை எண்ணுவதும், வாயால் அவர் புகழ் பாடுவதும், உடலால் அவரைப் பூஜிப்பதுமாக ஆஞ்சனேயர் நாட்களைக் கழித்து வந்தார்.

இராவணன் அபகரித்துச் சென்ற சீதையைத் தேடிக்கொண்டு இராமபிரான் தம்பி லட்சுமணனுடன் ரிச்யமுக பர்வதத்திற்கு வந்து சேர்ந்தார்.

★ ★ ★

சுக்கிரீவன், அனுமன் உள்பட தன்னைச் சேர்ந்த வீரர்கள் சிலருடன் ஒரு மலையின் சிகரத்தின்மீது நின்றுகொண்டிருந்தான். தூரத்தில் இராமபிரான் வருவதைக் கண்ட சுக்கிரீவன், தன் அண்ணன் வாலி தன்னைக் கொல்வதற்காகவே இந்த இரண்டு அரசகுமாரர்களையும் அனுப்பியிருப்பான் என்று நினைத்தான். ஆகவே பயந்துபோன அவன் ஓடோடிச் சென்று ஒரு மலையின் குகைக்குள் ஒளிந்துகொண்டான். அவன் அஞ்சி ஓடுவதைக் கண்ட அவனது வீரர்களும் மூலைக்கொருவராக ஓடி ஆங்காங்கே தென்பட்ட மறைவிடங்களில் ஒளிந்துகொண்டனர்.

ஆனால் அனைவரும் ஓடி ஒளிந்துகொண்ட பின்பும் ஆஞ்சனேயர் மட்டும் தாம் இருந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. அவர் நின்ற இடத்தில் இருந்தபடியே இராம லட்சுமணர்களைக் கூர்ந்து கவனித்து, 'இவர்களின் தோற்றத்தைப் பார்த்தால் பகைவர்களாகத் தோன்றவில்லை; சரண்புகுவதற்கு உரிய அருளாளர்கள் போன்றே இவர்கள் தென்படுகிறார்கள்' என்று முடிவு செய்தார்.



இராம லட்சுமணர்களை முதல் முறை பார்த்தபோதே ஆஞ்சனேயர் இவ்விதம் நினைத்தது, அவரது மிகச் சிறந்த அறிவாற்றலைப் புலப்படுத்துகிறது.

பின்னர் அவர், சுக்கிரீவன் இருக்கும் இடத்தை அடைந்து, ''நீங்கள் பயப்படாமல் இங்கேயே இருங்கள். நான் அவர்களிடம் சென்று அவர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொண்டு வருகிறேன்'' என்று ஆறுதலாகக் கூறினர்.

அவரது யோசனைக்கு உடன்பட்ட சுக்கிரீவன் அவ்வாறே விஷயத்தைத் தெரிந்துகொண்டு வர அனுமனை அனுப்பினன்.

மாருதி தம் சுய உருவத்தில் செல்லாமல், சாதாரண ஓர் அந்தணனின் வடிவத்தில் இராம லட்சுமணர்கள் இருந்த இடத்தை நோக்கிச் சென்றார். அவ்விதம் சென்றபோது அவரது உள்ளத்தில், ''இவர்கள் தவக்கோலம் பூண்டிருந்தும் கையில் வில்லை வைத்திருக்கிறார்கள். இவர்களின் முகப்பொலிவையும் கம்பீரமான தோற்றத்தையும் பார்க்கும்போது தேவர்களுக்கெல்லாம் தலைமை பூண்ட பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஆகிய மூவரோ என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனல் அவர்கள் மூவர்; இவர்களோ இருவர்; இவர்கள் கைகளிலுள்ள வில்களுக்கு எதிராக நிற்கக் கூடியவர் இம்மூவுலகிலும் எவரேனும் இருப்பார்களா? இவர்களுடைய பெருமை என்னுல் அளவிடற்கரியது'' என்ற எண்ணங்கள் தோன்றின.

''இவர்கள் தேவர்கள் அல்லர்; மானுடர் தாம். இவர்களின் முகத்தில் வருத்தம் தேங்கிக் கிடக்கிறது; ஏதோ தம் சிந்தனைக்கு உரிய ஒரு

பொருளை நாடியலைபவர்கள் போலக் காணப் படுகின்றனர். தருமமும் ஒழுக்கமும் நிரம்பிய வர்களாக இவர்கள் தென்படுகிறார்கள். ஆகவே பேராசை காரணமாக இவர்கள் ஏதேனும் ஒன்றை நாடுபவர் அல்லர். அருமருந்துக்கு ஒப் பான ஏதோ ஒன்றை இழந்து, அதைத் தேடி நெடுந்தூரம் இவர்கள் வந்துகொண்டிருக் கிறார்கள் என்றே தோன்றுகிறது. இவர்கள் சுக்கிரீவனுக்குத் துன்பம் விளைவிக்கக் கருதி வாலியினால் அனுப்பப்பட்டவர்களாக இருக்க இயலாது.

"இந்திரன் அஞ்சத்தக்க தோற்றத்தையும், தருமதேவதை அஞ்சத்தக்க மேலான ஒழுக் கத்தையும், மன்மதன் அஞ்சத்தக்க வடிவத்தை யும், யமனும் அஞ்சத்தக்க வலிமையையும் இவர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுடைய வீரத்திற்கு எல்லையே இருக்க இயலாது என்று தோன்றுகிறது.

"இவர்களது கண்கள் கருணையைப் பொழிந்த வாறு இருக்கின்றன. என் மனம் ஏன் இவர்கள் மீது இவ்விதம் இயல்பாகவே கவரப்படுகிறது? விட்ட குறை, தொட்ட குறை என்பது இது தானோ? நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வெண்ணெய் போன்று அல்லவா இவர்களைக் கண்டதும் என் மனம் உருகுகிறது?" என்றெல் லாம் ஸ்ரீராம லட்சுமணர்களைக் கூர்ந்து கவனித்த மாருதி நினைத்துக்கொண்டார்.

பிறகு ஆஞ்சனேயர், ஸ்ரீராம லட்சுமணர்களை அணுகி, சாதுர்யமாக சம்ஸ்கிருத மொழியில் பேசி அவர்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் அறிந்து கொண்டார். சுக்கிரீவனைப் பற்றியும் அவர்களிடம் தெரிவித்தார்.

முதல் முறையாக அனுமனைச் சந்தித்த போதே ஸ்ரீராமர் அனுமனைப் பற்றிப் புரிந்து கொண்டார். அதை அவர் லட்சுமணனிடம் பின்வருமாறு கூறியதிலிருந்து நன்கு அறிந்து கொள்ளலாம்:—

"தம்பி! இவனைப் போல் பேசுவதற்கு ஒருவன் மூன்று வேதங்களையும் நன்கு கற்றறிந்தவனாக இருக்க வேண்டும். நல்ல வாக்குவன்மையுள்ள வனாக இருக்கிறான். தன் பேச்சினால் ஒரு காரியத்தையும் இவன் கெடுத்துவிடமாட்டான். இவன் பேசுவதைக் கேட்க என் உள்ளம் பெரிதும் களிப்பெய்துகிறது. இப்படிப் பேசு கிறவன் காலில் பரம விரோதியாக இருப்பவன் கூடப் பணிந்தெழுவான். பெரிய காரியங்களைச் சாதிக்கும் எண்ணம் கொண்ட அரசன் எவனா வது இருந்தால் அவனுக்கு இவனைப் போன்ற மந்திரிதான் இருக்க வேண்டும். இவனைப் போன்ற ஆள் ஒருவன்கீழ் இருந்தால் அவனால் ஆகாத காரியம் இவ்வுலகில் ஒன்றுமே இருக் காது. அவனுக்கு யாவும் வெற்றியே தரும்.*

"பேசும் முறையிலிருந்து கலைகளையும் வேதங் களையும் இவன் நன்கு கற்றவன் என்று தெரி கிறது; சொல்லாற்றல் மிக்க இவன் சிவனோ? அல்லது பிரமனோ? இவன் ஆற்றலும் அறிவும் கல்வியும் பலமும் ஒழுக்கமும் உடையவனாகத் தென்படுகிறான். இப்போது இவன் கொண்டிருக் கும் மனித வடிவம் இவனுடையதன்று என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது; பின்னர் நீயும் தெரிந்துகொள்வாய்." †

முதல் சந்திப்பின்போதே அனுமனும் ராமரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண் டனர்.

இதன் தொடர்ச்சியாக அமைந்திருக்கும் அனுமனின் வரலாற்றை அடுத்த இதழிலும் நாம் பார்க்கப் போகிறோம்.

---

* ராமாயணப் பேருரைகள்

† கம்பராமாயணம்

எப்பொழுதும் பிரியமாகப் பேசுகிற மனிதர்கள் நன்கு கிடைப்பார்கள். ஆனால் பிரியமில்லாத நலம் தரும் வார்த்தை பேசுபவனும் கேட்பவனும் மிகவும் கஷ்ட மாகத்தான் அகப்படுவான்.
— ஒரு சுலோகம்

காய்க்காக மரம் பூக்கிறது. காய் தோன்றியதும் பூ உதிர்கிறது. அது போல, ஞானத்திற்காக வினைசெய்தால் ஞானம் கிட்டியதும் வினை அழியும்.
— கபீர்

எந்த இடத்தில் நாம் பணக்காரராய் இருந்தோமோ அந்த இடத்தில் ஏழையாய் இருப்பது உத்தமமன்று.
— பஞ்சதந்திரம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

சனிக்கிழமை, ஏப்ரல் 5, 1884

அப்போது காலையில் ஏறக்குறைய எட்டு மணி இருக்கும். ம— தட்சிணேசுவரம் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சிரித்த முகத்துடன் தமது அறையில் சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். தரையில் சில பக்தர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பிராணகிருஷ்ண முகர்ஜியும் அங்கு இருந்தார். குருதேவர் அந்தப் பக்தர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

ஜனய் என்ற இடத்தைச் சேர்ந்த பிராணகிருஷ்ணர் செல்வாக்கு மிகுந்த முகோபாத்தியாயர் வம்சத்தில் பிறந்தவர். கல்கத்தாவில் சியாம்புகுர் என்ற பகுதியில் அவருக்குப் பெரிய வீடு இருந்தது. மேகன்ஸி என்ற பெயர் கொண்ட ஓர் ஆங்கில வர்த்தகச் சங்கத்தாரின் ஏலம் விடும் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக அவர் இருந்தார்.

அவர் இல்லற வாழ்க்கையில் இருந்து வந்தார் என்றாலும் அவருக்கு வேதாந்தம் கற்றுக்கொள்வதில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. அவ்விதம் வேதாந்தம் கற்பதனால் அவர் மிக்க மகிழ்ச்சி அடைந்து வந்தார். அடிக்கடி அவர் தட்சிணேசுவரம் வந்து குருதேவரைத் தரிசித்துப் போவது வழக்கம்.

ஒரு முறை அவர் குருதேவரைக் கல்கத்தாவிலுள்ள தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று பெரிய விழா நடத்தினார். பாக்பஜார் ஸ்நான கட்டத்தில் அவர் தினமும் அதிகாலையில் கங்கையில் நீராடுவார். சௌகரியம் நேரும்போதெல்லாம் அவர் வாடகைக்குப் படகை அமர்த்திக்கொண்டு தட்சிணேசுவரத்திற்கு வந்து ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசித்துச் செல்வது வழக்கம்.

இன்றைய தினமும் அவர் தமது வழக்கப்படி படகை அமர்த்திக்கொண்டு, ம—வையும் தம்முடன் அழைத்துக்கொண்டு தட்சிணேசுவரம் புறப்பட்டார். படகு புறப்பட்டுச் சிறிது தூரம் செல்வதற்குள் கங்கையில் பலமாக அலைகள் வீச ஆரம்பித்தன. அலைகள் படகில் மோதியதனால் படகு பலமாக ஆட ஆரம்பித்துவிட்டது. பிராணகிருஷ்ணருடன் இருந்த ம— தம்மைப் படகிலிருந்து இறக்கி விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார். பிராணகிருஷ்ணரும் அவரது நண்பரும் ம—வுக்கு எவ்வளவோ தைரியம் சொல்லிப் பார்த்தார்கள் என்றாலும் அவர்கள் சொன்னது எதையும் ஏற்றுக்கொள்ளாமல், ''என்னைக் கரையில் விட்டுவிடுங்கள். நான் கங்கைக் கரையோரமாகவே நடந்து தட்சிணேசுவரத்திற்கு வந்துவிடுகிறேன்'' என்று திரும்பத் திரும்ப ம— வற்புறுத்தினார். வேறு வழியின்றிப் பிராணகிருஷ்ணர் ம—வைப் படகிலிருந்து கங்கைக்கரையில் இறக்கி விட்டுவிட்டார்.

ம— கால்நடையாகத் தட்சிணேசுவரத்தை அடைந்தபோது, பிராணகிருஷ்ணர் படகுப் பிரயாணம் முடிந்து ஸ்ரீராமகிருஷ்ணரின் அறையில் குருதேவருடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டார். ம— தரையில் வீழ்ந்து ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு அறையில் ஒரு பக்கமாக அமர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பிராணகிருஷ்ணரிடம்) :- ஆனால் மனிதனிடம் ஆண்டவன் மிகவும் அதிகமான அளவில் பிரகாசிக்கிறார். ''ஆண்டவன் எப்படி மனிதனாக வர முடியும்? மனிதனுக்குப் பசி தாகம் போன்றவை எல்லாம் இருக்

கின்றனவே. அத்துடன் நோய், மனக்கவலை போன்றவற்றைக்கூட அனுபவிக்கவேண்டியிருக்கிறதே?'' என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதிலாக, "பஞ்சபூதங்கள் என்ற வலையில் அகப்பட்டுக்கொண்டு பிரம்மம் கண்ணீர் வடிக்கிறது'' என்றுதான் சொல்ல முடியும்.

ஸ்ரீராமபிரான் சீதையைப் பிரிந்த துன்பம் காரணமாக மிகவும் புலம்பினார் என்பது உங்களுக்குத் தெரியாதா? மேலும், ஹிரண்யாட்சன் என்ற அசுரனைக் கொல்வதற்காக வராகமாக அவதாரம் எடுத்தார். அதன்படி ஹிரண்யாட்சனை அவர் கொன்றார். பிறகு தமது இருப்பிடமாகிய வைகுண்டத்திற்குத் திரும்பிச் செல்ல விரும்பவே இல்லை! வராகமாகவே அவர் மகிழ்ச்சியோடு இருந்து வந்தார்.

அந்த வராகம் பல குட்டிகளை ஈன்றது. தன் குட்டிகளுடன் அது ஆனந்தமாக வசித்து வந்தது. தேவர்கள், 'நாராயணர் இப்படிப் பன்றியாக இருந்து வருகிறாரே! அவருக்கு வைகுண்டத்திற்குத் திரும்பிப் போகவேண்டும் என்ற எண்ணமே தோன்றவில்லையே!' என்று தங்களுக்குள் வருத்தத்துடன் பேசிக்கொண்டார்கள். பிறகு தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் சென்று, "வராக அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு வைகுண்டத்திற்குத் திரும்பாமல் இன்னும் பன்றியாகவே இருந்துகொண்டிருக்கிறார்'' என்ற தகவலைக் கவலையோடு விளக்கமாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சிவபெருமான் மகாவிஷ்ணுவாகிய வராகத்தினிடம் சென்று, பன்றி உடலை விட்டு மகாவிஷ்ணுவாக வைகுண்டத்திற்குத் திரும்புமாறு பல விதங்களில் வற்புறுத்தினார். ஆனால் சிவபெருமானின் அத்தகைய முயற்சிகளால் பயன் ஒன்றுமே ஏற்படவில்லை. மகாவிஷ்ணுவாகிய அந்த வராகம் தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்கத்தான் ஆரம்பித்தது!

[எல்லோரும் சிரித்தல்]

பிறகு சிவபெருமான் தமது திரிசூலத்தினால் அந்த வராகத்தின் உடலைக் கிழித்து அதைக் கொன்றார். பிறகு மகாவிஷ்ணுவும் 'ஹி, ஹி' என்று சிரித்துக்கொண்டே பன்றி உடலிலிருந்து வெளிவந்து தமது இருப்பிடமாகிய வைகுண்டம் திரும்பினார்.

பிராணகிருஷ்ணர் (குருதேவரிடம்) : சுவாமி! அனாஹத சப்தம் என்றால் என்ன ?


ஸ்ரீராமகிருஷ்ணர் : அனாஹத சப்தம் என்பது சதாசர்வகாலமும் தொடர்ந்து தானாகவே ஒலித்துக்கொண்டிருக்கும் ஓர் ஒலியாகும். பிரணவத்தின் த்வனியாகிய ஓங்காரம்தான் அது. பரப்பிரம்மத்திடமிருந்து அந்தச் சப்தம் சதாகாலமும் எழுந்தபடியே இருக்கிறது. யோகிகளால் அந்தச் சப்தத்தைக் கேட்க முடியும். உலகின் ஆசாபாசங்களில் ஆழ்ந்திருக்கும் லௌகிக மக்களால் அந்தச் சப்தத்தைக் கேட்க இயலாது. ஓங்கார சப்தம் தன் நாபியிலிருந்து எழுகிறது என்பதையும், அதே சமயத்தில் அது பாற்கடலில்* பள்ளிகொண்டிருக்கும் பரப்பிரம்மத்திடமிருந்தும் எழுந்துகொண்டே இருக்கிறது என்பதையும் யோகி மட்டுமே அறிந்திருக்கிறான்.

* மகாப்பிரளய காலத்தில் சிருஷ்டி துவங்குவதற்கு முன்னால் பரமாத்மா மகாகாரண நிலையில் இருக்கிறார் என்பது பௌராணிகர்களின் கருத்து. அந்த நிலை பாற்கடல் என்றும் சொல்லப்படுகிறது.

நம்பிக்கை இழக்காதே. அவநம்பிக்கையானது அறிவு, ஒழுக்கம் ஆகியவைகளுக்கு விழ்ச்சியாகும்.
— இக்பால்

தன் விதி பிரதிகூலமாய் இருக்கும் காலத்தில் பராக்கிரமமும் முயற்சியும் வீணாகின்றன.
— பஞ்ச தந்திரம்

நீரால் நெருப்பையும், குடையால் சூரிய தாபத்தையும், கூர்மையான ஈட்டியால் பெரிய மதயானையையும், தடியால் பசு, கழுதை முதலியவைகளையும், மருந்தால் வியாதியையும், பலவித மந்திரங்களால் விஷத்தையும் அடக்கிவிடலாம். எல்லாவற்றுக்கும் சாஸ்திரத்தில் மருந்து (உபாயம்) சொல்லியிருக்க, மூர்க்கனுக்கு மாத்திரம் மருந்தில்லையே?
— பர்த்ருஹரி



புதிய உலகத்தை உருவாக்குவோம்

ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ்
தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம் — சங்கம்

1980-ஆம் ஆண்டு டிசம்பர் 23 முதல் 29 தேதி வரை பேலூர் மடத்தில் ஸ்ரீராம கிருஷ்ண மடம், சங்கம் ஆகியவற்றின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. மாநாட்டைத் துவக்கி வைத்துப் பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் ஆற்றிய உரை இங்குக் கட்டுரையாக இடம் பெறுகிறது.

ஐம்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இதோ இப்போது நாம் கூடியிருக்கும் இதே இடத்தில், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கம் ஆகியவற்றின் உலகம் தழுவிய முதல் மாநாடு, அப்போது ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கங்களின் தலைவரும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்ச் சீடர்களில் ஒருவருமான சுவாமி சிவானந்த மகராஜின் தலைமையில் நடந்தது.

அந்த மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தவர், அப்போதைய ஸ்ரீராம கிருஷ்ண மடம், சங்கங்களின் செயலாளரும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்ச் சீடர்களில் மற்றொருவருமான சுவாமி சாரதானந்த மகராஜ்.

அந்த மாநாட்டின் தலையாய நோக்கங்கள், உறுப்பினர்களிடையே கருத்துப் பரிமாற்றம், மடம் சங்கங்களின் கொள்கையில் உறுப்பினர்களுக்குள்ள நம்பிக்கையை வலுப்படுத்துதல், அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதால் புதிய ஆர்வத்தைப் புகுத்துதல், உறுப்பினர்களுக்கிடையே நெருக்கமான உறவையும் ஒருவருக்கொருவர் மடம் சங்கம் கொள்கைகளைப் பரப்புவதால் உதவி செய்துகொள்ளுதலுமாகும்.

தற்போதைய இரண்டாம் மாநாட்டின் நோக்கமும் அதுவேதான். அதாவது, நம் சங்கத்தை மேற்கூறிய வழிகளில் வலிமைப் படுத்துதல். இங்கே நான் சங்கம் என்னும் சொல்லை மிகப் பரந்த பொருளில் பயன்படுத்துகிறேன். சங்கம் என்ற சொல்லைப் பொதுவாகச் சந்நியாசிகளின் கூட்டத்தைக் குறிப்பதற்கு மட்டும் பயன்படுத்துவார்கள். நான் இங்கே இல்லறப் பக்தர்களையும் சேர்த்தே சங்கம் என்று கூறுகிறேன்.

முதல் மாநாடு நடந்தபோது, நாம் அன்னியர்களின் ஆட்சியில் இருந்தோம். சமுதாயத்தின் நிலைமையும் மக்களின் வாழ்வும் இன்றிலிருந்து அப்போது மிகவும் மாறுபட்டதாக இருந்தது; பாராட்டும்படியாக இல்லை.

இப்போதோ, கடந்த 33 ஆண்டுகளாக நாம் சுதந்திர மக்களாக வாழ்கிறோம். ஆனால், சிற்சில வழிகளில் நம்முடைய நிலை திருந்தியிருந்தாலும், துரதிர்ஷ்டவசமாக, மற்றும் பல நிலைகளில் முன்பு இருந்ததைவிட மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுவிட்டோம். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், சமுதாயத்தின் ஒவ்வோர் அங்கத்திலும், ஒழுக்கத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும் நம் நிலை மிக மிக மோசமாக இருப்பதைக் காண்கிறோம். நான் அவைபற்றிப் பெரிதாக விவரிக்க வேண்டியதில்லை. நீங்கள் அனைவருமே அறிவீர்கள். இன்றைய சூழ்நிலையில் நேர்மையும் நாணயமும் கொண்ட மனிதனால் வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் கடினமாகிவிட்டது. இப்போதைய இந்த நிலைமை தவிர்க்க முடியாததாகவே காணப்படுகிறது. ஏனென்றால் ஒரு சமுதாயத்தில், வாழ்க்கையின் போக்கில் சீரழிவும் பகைமையும் துவங்குமேயானால், நாம் அதன் திசையை மாற்றி அமைப்பதற்குள், அது தன் பயங்கரமான விளைவை ஏற்படுத்தி முடித்தே விடுகிறது.

வாழ்வின் சீரழிந்த இந்த நிலை நம் இந்தியா வில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே இருக் கிறது. இதற்குக் காரணம், சமய வாழ்வை ஒதுக்கித் தள்ளிவிட்டு, போக வாழ்க்கையை மக்கள் தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு பின்பற்றுவதாகும். மேல்நாட்டில் துவங்கிய இந்தப் புதிய வாழ்க்கை முறை, இந்தியா உட்பட உலகம் முழுவதும் இப்போது பரவியிருக்கிறது.

இந்தியா சமயத்தை விட்டுவிடுமேயானல், மறு விநாடியே அது அழிந்து போகும். ஏனென்றல், சமயம்தான் நூற்றுண்டு நூற் ருண்டுகளாக இந்தியப் பண்பாட்டின் முது கெலும்பாக அமைந்துள்ளது. மனிதன் தன் முதுகெலும்பை மாற்றிக்கொண்டுவிட முடி யாது. அது போல் நம் பண்பாட்டிலிருந்தும், சமயத்தையும் நம்மால் மாற்றிக்கொள்ள முடி யாது. அதற்கு அவசியமும் இல்லை. நம் முடைய இந்தச் சீரழிவிற்கு நம் சமயந்தான் காரணம் என்று அடிக்கடி கேள்விப்படுகிறேம். ஆனல் சுவாமி விவேகானந்தர் இதற்கு நேர் எதிரான கருத்தைக் கூறுகிருர். நம்முடைய சீரழிவு எதனல் என்றல், சமயத்தை அதன் உண்மையான அர்த்தத்தில் நாம் பின்பற்ருதது தான் என்று கூறுகிருர்.

நம்முடைய நாட்டை - வாழ்வைச் சரியான பாதையில் திருப்ப வேண்டுமென்றல், நாம் உண்மையான சமயத்திடம் திரும்பிச் செல்ல வேண்டும். சமயம் என்ற பெயரால் பின் பற்றும் சில மூடப்பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும். உண்மையான சமயம் எது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

எந்த உண்மையான சமயத்திலிருந்து நாம் விலகிச் சென்றுவிட்டோமோ, அந்த உண்மை யான சமயத்திற்கு நம்மைத் திரும்ப அழைத்துச் செல்ல இரண்டு மகோன்னத மகான்கள் இந்த நாட்டில் கடந்த நூற்றுண்டில் தோன்றி னுர்கள். அவர்கள்தாம் ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், 'வாழ்வின் குறிக் கோள் கடவுளை உணர்வது ஒன்றுதான்' என்று உபதேசம் செய்தார். நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியாலும் சிந்தனையாலும் கடவுள் இருக் கிருர் என்பதில் பெரும் சந்தேகம் கொண்ட மனித சமுதாயத்திற்கு, அவர் கடவுள் இருப்பது உண்மையே என்று முழக்கம் செய்தார். தான் கடவுளை நேருக்கு நேரே கண்டு, சரியான பாதையைப் பின்பற்றினல், எந்த மனிதனும் கடவுளைக் காண முடியும் என்று பறை யறைந்தார்.

அவருடைய இந்த முழக்கம், விஞ்ஞானமய மான இந்த உலகில் கடவுள் இருப்பதைப் பற்றிய எல்லா விதமான சந்தேகங்களையும் தடைகளையும் அகற்றியது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்துப்படி, சமயம் என்பது அண்ட சராசரங்களுக்கு எல்லாம் அடிப்படையாகவும், அந்த அண்ட சராசரங்களாகவுமே இருக்கும், முதலான, முடி வான சத்தியத்தை நேருக்குநேர் அனுபவித்துக் காண்பதாகும்.

அந்தச் சத்தியத்தை அடைவதற்காகச் சாஸ் திரங்களில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு உண்மை யான அர்த்தத்தை மறந்தும், தவருன விளக்கங் களைக் கூறியும் வந்தவர்களுக்கு, ஸ்ரீராம கிருஷ்ணர் சாஸ்திரங்களின் அந்தக் கருத்துக் களுக்கு உண்மையான அர்த்தத்தைச் சுட்டிக் காட்டினர்.

அவர் மேலும், 'உலகிலுள்ள எல்லாச் சமயங் களுமே மனிதனைக் கடவுளை நோக்கியே அழைத்துச் செல்லுகின்றன. அந்தச் சமயங் களும் இன்றைய விஞ்ஞானமயமான மனிதர்கள், கடவுளை நம்புவதற்கு அமைந்த ஒரே வழி யான கடவுளை நேருக்கு நேரே காணும் முறை மூலமே, கடவுளிடம் அவர்களை அழைத்துச் செல்லுகின்றன' என்று கூறினர்.

துறவு பொங்கிப் பொழிபவராக அவர் இருந் தமையால், பொன்னையும் களிமண்ணையும் அவர் ஒன்றுகவே காணும் இயல்பை அடைந்திருந் தார். அந்தத் துறவியின் மூலம் மனித சமுதா யத்தின் இக்காலச் சித்தாந்தமாக இருக்கும், அடுத்தவர்களின் நிலத்தையும் சொத்தையும் அபகரித்தாவது மேலும் மேலும் பணம் சேர்க்க வேண்டும் என்னும் கொள்கையின் பயனற்ற தன்மையையும் அதோடு, பலவேறுன நிறம், சாதி மதத்தைச் சேர்ந்த எல்லா மனிதர்களிடத் திலும் ஒரே ஆன்மாதான் இருக்கிறது என்னும் உண்மையையும் நேருக்குநேர் அறிந்தார். இந்த ஒரே ஆன்மாதான் ஏழை பணக்காரன், உயர்ந்

தவன் தாழ்ந்தவன், படித்தவன் படிக்காதவன் ஆகிய எல்லோரிடத்திலும், எல்லா இனத்தையும் சேர்ந்த ஆண் பெண் அனைவரிடத்திலும் இருப்பதை அனுபவபூர்வமாகக் கண்டறிந்தார்.

அவர்களுக்கிடையில் இருப்பதாகச் சொல்லும் வேற்றுமைகள் எல்லாம் கற்பனைமயமானவை, மனிதனால் உருவாக்கப்பட்டவை.

கடலின் மேற்புறத்தில் பலவகை அலைகள் உருவாகி அமர்க்களம் செய்கின்றன. ஆனால் அதன் அடியில் இருப்பதெல்லாம் தண்ணீர் தான். அது போலவே, மனிதர்களிடத்திலே இருக்கிற இந்த வேற்றுமை எல்லாம் மேம்போக்கானவை; அடியில் இருப்பதெல்லாம் ஆத்மா ஒன்றுதான். இந்தக் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது, மனித சமுதாயம் முழுவதுமே ஒன்றுதான். ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும், ஒரு பிரிவிற்கும் மற்றொரு பிரிவிற்கும், இன்று காணும் சண்டை சச்சரவிற்கு அவசியமே இல்லை.

மேற்கண்ட உபதேசங்களின் முடிவாக அவர், 'மனிதர்களுக்குச் செய்யும் சேவை மூலம் கடவுளுக்குச் சேவை செய்யுங்கள். மனிதர்களுக்குச் செய்யும் சேவை கடவுளை நேருக்கு நேரே காண உங்களை அழைத்துச் செல்லும்' என்றார்.

இவ்வாறாகக் காலம் காலமாக உடலுழைப்பிற்கும் பூஜைக்கும் இருந்த வேற்றுமையை அவர் ஒன்றுபடுத்தினார். உடல் உழைப்பு, சரியான மனநிலையோடு செய்யப்படுமேயானால், அதுவே புனிதமான வழிபாடாகும் என்றார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்தப் பரந்த உபதேசங்கள் இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் உரியவை. இந்த உபதேசங்களை நாம் உலக மக்களோடு பங்கிட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நமக்கு நாம் நன்மை செய்து கொள்வதற்கான ஒரே வழி இதுதான். ஏனென்றால், சுவாமி விவேகானந்தர் கூறியபடி, 'நல்லவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு மனவிரிவடைவதுதான் வாழ்க்கை; அப்படி இல்லாமல் நாம் மட்டுமே வைத்துக்கொண்டு அனுபவிப்பது சுயநலம், சாவு!'

நம்மிடம் உள்ள உன்னதமானவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் புனிதமான காரியத்தை இதற்கு முன்பு நாம் பல முறை செய்திருக்கிறோம். இந்த யுகத்திலும் நாம் மறுபடியும் அதைச் செய்தாக வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்த உபதேசங்களுக்காகவே உலகம் இதுவரை காத்துக்கொண்டிருந்தது. உலகில் எங்கெங்கே ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசம் செல்லுகிறதோ, அங்கெல்லாம் பெரும் ஆவலோடு ஏற்றுக்கொள்ளும் காட்சி, இதை உறுதிப்படுத்துகிறது.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஒரே ஒரு உபதேசத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். அந்த உபதேசம் - 'மக்களைக் கடவுளாக நினைத்துச் சேவை செய்யுங்கள்' என்பதாகும். இந்தக் கொள்கையையே தாம் அமைத்த ராமகிருஷ்ண மடம் — சங்கம் இவற்றின் அடிப்படைக் கொள்கையாக, 'ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாய ச' (ஆத்மாவிற்கு மோட்சம், உலகிற்கு நன்மை) என்று அமைத்தார்.

இந்த நூற்றாண்டில் உலகில் அமைதி நிலவச் செய்வது மிகமிக முக்கியமானதாகும். அதற்காக இது நாள்வரை காட்டின் நடுவே, ஆசிரமங்களுக்குள்ளும் மடங்களுக்குள்ளும் அடைபட்டுக் கிடந்த அத்வைத தருமத்தை, சாதாரண மக்களின் அன்றாட வாழ்விற்கு அழைத்து வரத் துடித்தார். அந்தத் துடிப்பிற்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் 'மக்கள் சேவை மூலம் கடவுளைக் காணுங்கள்' என்று உபதேசம் அடிப்படை நாதமாக அமைந்தது.

சுவாமிஜி மேற்கொண்ட ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசத்தின் அடிப்படையில், இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களையும், இந்த நாட்டின் முன்னேற்றத்துக்காக, இந்த நாட்டின் உயிர்நாடிக் கொள்கையான கடவுளை அடைதல் என்னும் கொள்கைக்கு மாறுபாடு இல்லாமல், ஒன்றுசேர்க்க முடியும் என்பதைக் கண்டறிந்தார். அவருக்கு இந்த இலட்சியத்தின் முதற் படி, ஏழை எளிய பாமர மக்களையும் பெண்களையும் கற்றவர்களாக்குவதாகும். அவர் அடிக்கடி மனம் வருந்தி, இந்த நாட்டின் இழிவைப் பற்றிக் குறிப்பிட்ட போதெல்லாம் அதற்கான காரணங்கள் ஏழை எளியவர்களுக்கும் பெண்களுக்கும் கல்வியறிவு இல்லாத இந்த இரண்டு காரணங்களைத்தான் அடிக்கடி கூறுவார். ''இந்த நாட்டின் மிகப் பெரிய தேசியப் பாவம்'' ஏழை எளியவர்கள் படிப்புப் பெறவிடாமல் ஒதுக்கியதுதான். இதுவே இந்தியாவின்

வீழ்ச்சிக்கு உரிய முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இந்த ஏழை எளிய மக்கள் மறுபடியும் நல்ல உணவையும் நல்ல பாதுகாப்பையும் பெறும் வரை எவ்வளவு பெரிய அரசியல் சுதந்திரம் அமைந்திருப்பினும் பயன் இல்லை. இந்தியாவை மறுபடியும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவர விரும்பினால், இந்த ஏழை எளியவர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும்'' என்று அவர் கூறியுள்ளார்.

பிற்பட்ட மக்களை நாம் பண்பாட்டிலும் பழக்க வழக்கங்களிலும் உயர்த்த வேண்டும். அவர்களோடு உட்காருவதும் அவர்களைத் தொடுவதும் அசுத்தமானவை என்று நினைக்கக் கூடாது. அப்படி நினைப்பது, நாம் பெருமையோடு நம்முடையது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அந்த வேதாந்த உபதேசத்திற்கு ஏற்றதல்ல. இவ்வாறு கூறுவதன் மூலம் நம் சமயம் என்ன கூறுகிறதோ அதை நடைமுறையின் மூலம் நடத்திக் காட்ட நாம் தவறிவிடுகிறோம். அதுதான் இன்று நாட்டையே அழித்துவிட்டது.

உயர்ந்த சாதிக்காரர்களும் பணக்காரர்களும் இவ்வளவு காலங்களாகத் தாங்கள் செய்து வந்த குறும்புத்தனங்களையெல்லாம் நிறுத்திக் கொள்ள வேண்டும். பணக்காரப் பிரபு வர்க்கத்தினர் ஏழை மக்களுக்குச் சேவை செய்வதன் மூலம் தங்களுடைய பாவத்திற்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் நம் நாட்டை மறுபடியும் உயர்த்துவதற்கு உதவி செய்யும்.

நாம் ஏழை எளிய பாமர மக்களுக்குக் கல்வியையும் பண்பாட்டையும் தர வேண்டும். ஆன்மிகக் கருத்துக்களை அவர்களிடையே பரப்ப வேண்டும். இன்றைய விஞ்ஞான முறைகளைப் புகுத்தி அவர்களின் விவசாயம், குடிசைத் தொழில் முதலியவற்றை லாபம் தரும் தொழிலாக மாற்றி, அவர்களுடைய வருவாயைப் பெருக்க வேண்டும்.

இன்றைய இந்தியா இருக்கிற நிலையைப் பார்க்கும்போது, ஸ்ரீராமகிருஷ்ணரின் உலகம் தழுவிய உபதேசங்களை நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் பரப்ப வேண்டும். சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், அதிர்ஷ்டக் குறைவான, வசதியற்ற, பிற்பட்ட மக்கள் மேலவாழ் மக்களின் நன்மைக்குப் பாடுபடுவதும், அவர்களைப் பொருளாதாரம் ஆன்மிகம் ஆகிய இரண்டு நிலைகளிலும் உயர்வடையச் செய்வதும், சமுதாயத்தில், குறிப்பாகச் சிலரிடம் பரவியிருக்கும் பயங்கரமான சுயநலத்தை நீக்குவதற்காக, ஒழுக்கம் நேர்மை முதலியவற்றைக் கொண்டு வருவதற்குப் பாடுபடுவதும், நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

பெண்களையும் நல்ல கல்வி பெறச் செய்ய வேண்டும். அப்போதுதான் ஆண்களின் தலையீடு இல்லாமல் அவர்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ள முடியும். சுதந்திரம் அடைந்த பிறகு இந்தத் துறையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் மேலும் பல காரியங்கள் செய்யப்பட வேண்டும்.

சக்தியில்லாமல் உலகில் முன்னேற்றம் இல்லை. அன்னை சாரதாதேவியார் இந்தச் சக்தியின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகவே மனித வடிவில் இந்த நாட்டில் தோன்றினார். அவருடைய வாழ்வையும் உபதேசங்களையும் மையமாகக் கொண்டு மறுபடியும் வேதகால ஞான மணிகளான கார்கி மைத்ரேயி முதலிய பெண்கள் தோன்றப்போகிறார்கள்.

அவர், படித்த பெண்கள் சிலர் சந்நியாச வாழ்வை மேற்கொண்டு, பெண்கள் கல்வியைத் தங்கள் கையில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அப்போதுதான் பெண்மைக்கு உரிய இலட்சியத்தோடு அவர்களைப் பயிற்றுவிக்க முடியும். இம்மாதிரி வேலைகளைச் சந்நியாசிகள் கிராமம்தோறும் செய்ய வேண்டும் என்று சுவாமிஜி விரும்பினார். அப்போதுதான் இந்த நாடு முழுவதும், குறிப்பாகப் பிற்பட்ட மக்கள் அனைவரும் பயன் பெறுவார்கள். சுவாமிஜி விரும்பிய அப்படிப்பட்ட அமைப்புகள் ஏற்கனவே பெண்களின் முன்னேற்றத்திற்காக நம் நாட்டின் பல பகுதிகளில் சேவை செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்தியா வளரவேண்டுமானால், அது பலநூறு ஆண்டுகளாக வளர்த்து வந்த அதன் தேசிய உயிர்த்துடிப்பின் படியே வளர முடியும். இதை நான் உங்களுக்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சமயத்தின் அடிப்படை இல்லாமல் இந்தியாவில் எதுவும் வளரவே வளராது.

சமயத்தில்கூட இந்தியாவின் உலகம் தழுவிய கொள்கைக்கு அதிர்ச்சி தருவதுபோல் ஏதாவது இருந்தாலும் அந்தச் சமயமும் வளராது. அந்தச் சமயத்தை நம்நாடு ஏற்றுக்கொள்ளவும் ஏற்றுக் கொள்ளாது.

நான் இதுவரை சொன்னவை யாவும் நம் சங்கத்தின் சந்நியாசச் சீடர்களும் இல்லறச் சீடர்களும் இந் நாள் வரை நடைமுறையில் செயற்படுத்தி வருபவைதாம்.

நான் இல்லறச் சீடர்களுக்கு அழுத்தமாக, சிறப்பாகச் சொல்லுகிறேன்; தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் மட்டும் அல்லாமல், ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் பல்வேறு நிறுவனங்களை அமைத்து நடத்துகிற இல்லறச் சீடர்களுக்குக் கூறுகிறேன். அவர்க ளெல்லாம் நம்மால் விரும்பி அழைக்கப் பட்டு, இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மாநாட்டின் நடவடிக்கைகளில் முழுமை யாகக் கலந்துகொண்டு அதன் பலனை முழுமை யாகப் பெற வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பின்பற்றும் அன்பர்கள் அனைவருக்கும் நான் ஒரு வேண்டுகோள் விடுக் கிறேன். நம் நாட்டில், நம் மடம் சங்கங்கள் சந்நியாசிகளால் அமைக்கப்பட்டுச் சேவை செய்து வரும் ஸ்தாபனங்கள் நிறைய இருந் தாலும் அவை நாட்டின் தேவைகளை நினைக்கும் போது மிக மிகக் குறைவானவையேயாகும். எனவே, ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்கள் அனை வரும் தனித்தனியாகவும் நிறுவனங்கள் மூலமும் மிகுதியான ஆர்வத்தோடும் வேகத் தோடும் பாடுபட்டுப் புதிய இந்தியாவை நிர்ணயிக்க வேண்டும்.

நான் பொதுவான முறையில் நம் நாட்டின் இன்றைய தேவைகளையும் அவற்றைத் தீர்ப் பதற்கு நமக்கு உள்ள பொறுப்பையும் உங்கள் முன் கூறினேன். இந்த மாநாட்டில் பேச இருக்கும் மற்றவர்களும் இந்த இலட்சியச் சமுதாயத்திலே தனிப்பட்ட முறையிலும் அமைப்புகள் முறையிலும் எப்படிச் செயற் படுவது என்பதைப்பற்றிக் கூறுவார்கள்.

இறுதியாக, நான் உங்களுக்கு உலக வரலாற்றி லிருந்து ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலகில் தோன்றிய மகத்தான நாகரிகங்கள் அனைத்தும் தமக்குப் பின்பலமாக ஈடுஇணையற்ற ஒரு மகத்தான மகானைக் கொண்டே வளர்ந் துள்ளன. அவருடைய வாழ்வும் உபதேசங்களும் அந்தப் புதிய நாகரிகம் தோன்றுவதற்கான முன்வேகத்தை - உத்வேகத்தைத் தருகின்றன. அப்படிப்பட்ட வேகத்தைத் தந்து, ஒரு புதிய வாழ்க்கை முறையை - சமுதாய வாழ்வை-நாகரிகத்தை உருவாக்குகின்றன. கிறித்துவ நாகரிகம், இஸ்லாம் நாகரிகம், பௌத்த நாக ரிகம், இந்து நாகரிகம் முதலிய எல்லா நாகரிகங் களின் தோற்றத்துக்கும் இது அடிப்படையான உண்மையாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்விக உபதேசங் களும் அப்படி ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கும் ஆற்றல் நிறைந்தவை. அந்த ஆற்றல் மூலம் புதுமையான ஒரு சமூகம் ஏற்பட்டுக்கொண்டு வருவதை நாம் இப்போது உலகின் பல பாகங்களிலும் காண்கிறோம். உலகின் மிகப் பெரும் சிந்தனையாளர்களால் எழுதப்பட்ட நூல்கள் அனைத்திலுமே ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்களும் இந்தியாவின் வாழ்க்கை முறையும் இடம் பெற்றுள்ளன.

எனவே அவரது உபதேசங்களின்படி வாழும் பெரிய பொறுப்பும், அவற்றைப் பரப்பும் பொறுப்பும் நமக்கு உள்ளன. அவ்வாறு நாம் செய்வோமானால் அவருடைய மகத்தான உபதேசங்களின்படி ஒரு புதிய நாகரிகம்-ஒரு புதிய வாழ்க்கை எவ்வளவு விரைவில் முடிகிற தோ, அவ்வளவு விரைவில் உருவாகும். போராட்டங்கள் இல்லாத, வெறுப்புகள் இல்லாத, அதே நேரத்தில் இனிமையும் ஒற்றுமையும் உருவெடுத்த அன்புமயமான சமுதாயம் ஒன்று உருவாகும்.

உங்கள் அனைவரையும் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் பெயராலும், அன்னை சாரதாதேவி யின் பெயராலும், சுவாமி விவேகானந்தரின் பெயராலும், அவருடைய சகோதரச் சீடர் களின் பெயராலும் இந்தப் புனிதமான இடத் திற்கு வரவேற்கிறேன். நம் அனைவர்பேரிலும் அவர்கள் தங்கள் ஆசிகளைப் பொழிவார்களாக.

அவர்கள் அனைவருடைய ஆசிகள் மூலம் நாம் நம் முன் இப்போது நின்று போராடும் எல்லா விதமான எதிர்ப்புகளையும், பிரச்னை களையும் தீர்த்துவிடுவோம் என்றும், கடந்த 54 ஆண்டுகளில் நம்முள் புகுந்திருக்கக் கூடிய தவறுகளையும் நீக்கி விடுவோம் என்றும், நம்முடைய சங்கம் நம் அனைவருடைய நலத்துக் காகவும் உலக மக்கள் அனைவருடைய நலத்துக் காகவும் பேராற்றலோடு செயற்படும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

இறுதியாக, நான் கீழ்க்காணுமாறு பிரார்த் தனை செய்கிறேன்: நீங்கள் உங்களுடைய இலட்சியத்தை அடையும் பாதையில் ஒன்று பட்டிருப்பீர்களாக!

நீங்கள் அனைவரும் உங்கள் பேச்சில் ஒன்று பட்டிருப்பீர்களாக!

உங்களுடைய சிந்தனையில் நீங்கள் ஒன்று பட்டிருப்பீர்களாக!

உங்கள் இதயமெல்லாம் ஒன்றுபட்டிருக்கு மாக! உங்கள் சிந்தனைகளெல்லாம் ஒன்று பட்டிருக்குமாக!

உங்கள் அனைவரிடமும் முழுமையாக ஒற்றுமை அமைந்து விளங்குவதாக!

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

பிரதோஷ விரதம்

ராஜம் ஐயராமன்

விரதம் என்பது மனம் புலன் வழிச் செல்லாமல் மனதை ஒடுக்கிக் கடவுளைத் தியானிப்பதற்கு வேண்டிய ஒரு சாதனம் என்று மட்டும் எண்ணுமல், விரதமிருப்பது என்பது ஒரு தனியான புண்ணியச் செயல் என்பதை உணர வேண்டும். தானம் தருமம் முதலியவை எப்படிப் புண்ணியச் செயல்களாகின்றனவோ



அதுபோல விரதம் இருத்தலும் ஒரு புண்ணியச் செயலேயாகும். எல்லாப் புண்ணியச் செயல்களையும்விடக் கடவுளை நோக்கி வழிபாடு செய்வதே மிகவும் மேலான புண்ணியமாகும்.

வெறும் புலனடக்கமும் மன ஒடுக்கமும் மட்டும் விரதமிருப்பதற்குக் காரணமாயின், நமது வசதிப்படி நாம் விரும்பும் நேரத்தில் விரதம் இருக்கலாம். அவ்வாறு எவரும் செய்வதில்லை. விசேஷ தினங்களையே விரதகாலமாகக் கொள்ளுகின்றனர். அந்தத் தினங்களில் தனிப் பலனுண்டு என்பதை அனுபவம் மூலமாகவும் புராணங்கள் வாயிலாகவும் உணருகிறோம். இன்று சிவராத்திரி என்று உணராமலே அன்று முழுவதும் உணவு கிடைக்காமல் உண்ணுமல் இருந்து. இரவு முழுவதும் விழித்திருந்து சிவராத்திரி விரதபலனை அடையப்பெற்று, ஈசுவரனுல் ஆட்கொள்ளப்பட்ட வேடனைப் பற்றி நாம் புராணக்கதையின் மூலம் தெரிந்து கொள்கிறோம். ஒன்றும் அறியாமலே தற்செயலாய் விரதம் மேற்கொண்டதனுல் அந்த வேடனுக்குப் பலனைக் கொடுத்தது எது? சிவராத்திரி என்ற புண்ணிய காலமேயாகும். ஆகவே மற்றக் காலங்களில் வழிபடுவதற்கும் சோமவாரம், சுக்கிரவாரம், சிவராத்திரி, பிரதோஷம், சஷ்டி, கிருத்திகை போன்ற விசேஷ தினங்களில் விரதமிருந்து இறைவனை வழிபடுவதற்கும் வேறுபாடு மிக உண்டு.

விரதகாலங்களில் ஒரு பகல் மட்டும் உணவு கொள்ளுதல் அல்லது நாள்முழுவதும் உபவாசம் இருத்தல் எனச் செயல்கள் ஒரே மாதிரியாக இருப்பினும் காலவிசேஷத்தால் வெவ்வேருன பலனைத் தருகின்றன. சுக்கிரவாரம், சஷ்டி, பிரதோஷம் போன்றவை இம்மை நலன் கருதி விரதமிருக்கும் நாளாகும். சிவராத்திரி, சோமவாரம் முதலியன மறுமைநலன் கருதி வழிபாடு செய்யும் காலமாகும்.

இனி, சிவ விரதங்களில் ஒன்ருன பிரதோஷ விரதம் பற்றியும் அதனை அனுட்டிக்கும் முறை பற்றியும் அதன் பயனையும் பார்ப்போம்.

பிரதோஷம் பற்றிய புராண வரலாறு

துர்வாச முனிவர் சிவபூஜை செய்துவிட்டுப் பின் தேவலோகம் சென்றபோது, அங்கு ஐராவதத்தின் மீதமர்ந்து எதிர்ப்பட்ட இந்திரனிடம் சிவப்பிரசாதமாகக் கிடைத்த மலரை அன்புடன் அளித்தார். இந்திரனே மிகவும் அலட்சியத்துடன் அதை வாங்கி ஐராவதத்தின் தலையில் வைத்தான். அந்த யானை அந்த மலரைத் தன் துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்தது. இதனைக் கண்டு பெருங்கோபம் கொண்ட முனிவர் இந்திரனை நோக்கி, "நான் அளித்த சிவப்பிரசாதத்தை அதன் பெருமை தெரியாமல் அவமதித்தாய். இதற்குக் காரணம் உன் செல்வச் செருக்கேயாகும். ஆதலால் உன் செல்வங்களான காமதேனுவும் கற்பகமும் சிந்தாமணியும் பிற செல்வங்களும் உன்னை விட்டு நீங்குவனவாகுக" என்று சாபமிட்டுச் சென்ருர்.

உடனே தேவர்கள் தங்கள் செல்வம் அனைத்தையும் இழந்தனர். பின்பு திருமாலின் உபதேசப்படி அசுரர்களையும் உடன்கொண்டு மந்தரமலையைப் பாற்கடலில் மத்தாக நாட்டி, வாசுகியைக் கயிருக வந்த மலையில் சுற்றிக் கடலைக் கடைந்தனர். அதில் தேவர்கள் இழந்த செல்வங்களும் அமுதமும் விஷமும் ஒவ்வொன்ருகத் தோன்றலாயின.

விஷத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவ பெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். பரம கருணமூர்த்தியான சிவபெருமான் அந்த விஷத்தை உண்டு ஒரு க்ஷணநேரம் சும்மா இருந்தார். அன்றைய தினம் ஏகாதசி திதி. அந்த வேளையில் தேவர்கள் உபவாசம் இருந்து சிவனை வழிபட்டனர். மறுநாள் துவாதசி திதியில் பாரணம் செய்தனர். அதற்கு மறுநாள் சிவபெருமான் திரயோதசி திதியில் மாலை சூரிய அஸ்தமனத்திற்கு முன்பு மூன்றேமுக்கால் நாழிகையும், பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள ஏழரை நாழிகை நேரம் உமைப் பிராட்டியார் முன்னிலையில் தமது திருக் கரத்தில் டமருகம் ஏந்தி, சூலத்தைச் சுழற்றிக் கொண்டு, 'சந்தியா நிருத்தம்' என்ற ஆனந்த தாண்டவம் செய்தருளினர். அந்த வேளையே பிரதோஷ புண்ணிய காலம் என்று புராணம் கூறுகிறது.

சிவ விரதங்களில் ஒன்ருன இந்தப் பிரதோஷ விரதம் வளர்பிறை தேய்பிறையாகிய இரண்டு பக்ஷங்களில் வருகிற திரயோதசி திதியிலே மாலை ஏழரை நாழிகைக் காலமான பிரதோஷ காலத்திலே சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இந்த விரதத்தை ஐப்பசி கார்த்திகை சித்திரை வைகாசி என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிக்கிழமையில் வரும் பிரதோஷத்திலிருந்து முதலாகத் தொடங்கி அனுட்டிக்க வேண்டும். இவ்வாறு வரும் சனிப் பிரதோஷம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று ஆகமம் சொல்லுகிறது. பிரதோஷத்தன்று உபவாசமிருந்து சூரிய அஸ்தமனமாக நான்கு நாழிகை முன்பு ஸ்நானம் செய்து வில்வத்தினல் சிவபூஜை செய்து, பின்பு திருக்கோயிலுக்குச் சென்று அங்கு மூலலிங்கமூர்த்திக்கும் நந்திக்கும் நடக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளைக் கண்டு, பின்பு பிரதோஷ நாயகரை இடபவாகனத்தில் ஏற்றிக் கோயில் பிராகாரத்தை வலம் வருவதைக் கண்டு தரிசனம் செய்தல் வேண்டும்.

பிரதோஷ காலத்தில் கோயிலைப் பிரத க்ஷிணம் செய்யும் முறை யாதெனில், நந்தி தேவரைத் தரிசித்து அங்கிருந்து இடமாகச் சென்று சண்டேச நாயனரை வணங்கிப் பின்பு, சென்ற வழியே திரும்பி வந்து, மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து, பின்பு அங்கிருந்து வலமாகச் சென்று சண்டேச நாயனரைத் தரிசித்து, பின் திரும்பி வந்து நந்திதேவரை வணங்கி, அவருடைய இரண்டு கொம்பின் நடுவே பிரணவத்தோடுகூட 'ஹர ஹர' என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்குதல் வேண்டும். இப்படிச் செய்யும் பிரதக்ஷிணத்திற்கு, 'சோம சூத்திரப் பிரத க்ஷிணம்' என்று பெயர். இதனைப் பிரதோஷ காலத்தில் செய்தால் விசேஷமான பலனுண்டு.

இவ்வாறு சிவதரிசனம் செய்து, பின்பு சிவனடியார்களுக்கு உணவு படைத்துப் பின் விரதமிருப்பவர் உணவு கொள்ள வேண்டும். பிரதோஷ காலத்தில் செய்யும் சிவத் தொண்டு சிறிதாயினும் கோடானுகோடி பலனை அளிக்கும். இந்த விரதத்தை மெய்யன்போடு அனுட்டிப்போருக்குக் கடன் வறுமை நோய் பயம் கிலேசம் மரணவேதனை பாவம் முதலியன நீங்கும். ஆதலின் பிரதோஷ காலத்தின் விசேஷப் பலனை உணர்ந்து, வீண்காலம் போக்காமல் அன்றைத் தினங்களில், விரத மிருந்து அதன் பலனைப் பெறுதல் அறிவுடையோர் கடமையாகிறது.

卐 卐 卐 卐

நாம் பணக்காரர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனல் ஒழுக்க முள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிருேம். — பெர்னுர்டு ஷா

ஒருவன் தன் ஆத்மாவைப் பறிகொடுத்துவிட்டு, உலகம் முழுவதையுமே லாப மாகப் பெற்ருலும் என்ன பயன்? — ஆஸ்கார் ஒயில்டு

நல்லதோ கெட்டதோ, செய்த கருமத்தை அனுபவித்தாக வேண்டும். அனுபவிக்கப் படாத கருமம் கல்பமான பிறகுங்கூட அழிவதில்லை. (கருமத்திற்குக் கால அளவு இல்லை.) — ஒரு சுலோகம்



சுதீட்சண முனிவர்

கோமதி ராஜாங்கம்

''என் முன் நில்லாதே போ ! என் நாராயணனைக் கொண்டு வந்தால் இங்கு வா'' என்று அகஸ்திய முனிவர் கோபாவேசத்துடன் கூறினர்.

அவர் சொன்னதைக் கேட்டதும் சிறுவன் சுதீட்சணன் துவளும் நெஞ்சுடன் தலைகுனிந்து, கண்ணீர் மல்க, குருவைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துவிட்டு வெளியேறினன்.

அவனது கால்கள் தளர்ந்தன. ஆனல் நெஞ்சில் உரம் ஏறியது. 'ஆம், குருதேவரின் உபதேசப்படி எத்தனை ஆண்டுகள் ஆனலும் சரி, இந்த உயிர் இந்த உடலில் இருந்தால் ஸ்ரீமந்நாராயணனுடனேயே திரும்பி வருவேன்' என்று உறுதி செய்துகொண்டான்.

சுதீட்சணன் பெயருக்கு ஏற்ப, நல்ல கூர்மையான புத்தியுடன் விளங்கினன். குருவும் அவனை மிகவும் அன்புடன் நேசித்தார். ஆனல் அவனது விளையாட்டும் குறும்பும் அப்பப்பா ! சொல்லி முடியாது. சில நாள் முன்பு, குருவான அகஸ்தியர் க்ஷேத்திராடனம் செய்யக் கிளம்பியபோது தமது பூஜைப் பெட்டியுடன் சிறந்த சாளக்கிராமத்தையும் சுதீட்சணனிடம் ஒப்படைத்து, ''இந்தா ஸ்வாமி, பூஜைப் பெட்டியையும் ஸ்வாமியையும் பத்திரமாக வைத்திரு. ஸ்வாமிக்குக் கவனமாகப் பூஜை செய்'' என்று சொல்லிவிட்டுச் சென்றதைச் சுதீட்சணன் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.

ஒரு நாள் அவன் ஏரியிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து சாளக்கிராமத்திற்கு அபிஷேகம் செய்தான். ஆனல் மறுநாள் அவனுக்குச் சோம்பலாக இருந்தது. ஒரு யுக்தியும் தோன்றிற்று. 'ஆமாம், பூஜைப் பெட்டியை நதிக்கே தூக்கிச் சென்று விட்டால் என்ன ? அங்கே நாவல்மரம் இருக்கிறது ; புஷ்பச் செடிகளும் உண்டு. அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம் ஆகியவற்றை அங்கேயே முடித்துக்கொண்டு வந்துவிடலாமே !' என்று அவன் நினைத்தான். நினைத்தது செயலாயிற்று.

பூஜைப் பெட்டியை ஏரிகரைக்குத் தூக்கிச் சென்றான். ஆனி ஆடி மாதம். நாவல்மரத்தில் பழங்கள் மாங்காய் அளவு பழுத்துக் கன்னங்கறேல் என்று காட்சி தந்தன.

ரிஷி குமாரர்கள் கல்லை வீசி எறிந்து நாவற் பழங்களைத் தட்டிச் சாப்பிட்டார்கள். சுதீட்சணனும் சிறுவன்தானே ! விளையாட்டில் ஆர்வம்

காரணமாகப் பூஜையை மறந்தான். கற்களை வீசியெறிந்து பழங்களைத் தட்டி உற்சாகத்துடன் சாப்பிட ஆரம்பித்தான்.

அப்போது உயரத்தில் இரண்டு கொம்புகளுக்கிடையில் ஒரு பெரிய பழக் கொத்து இருந்ததை ரிஷிகுமாரர்கள் கவனித்தார்கள். அதை யார் தட்டுவது என்று அவர்களுக்கிடையில் போட்டி ஏற்பட்டது. பிள்ளைகள் ஆளுக்கொரு கல்லாக எறியத் தொடங்கினர்கள். ஆனல் சுதீட்சணனுக்குக் கல் கிடைக்கவில்லை. பழம் தின்னும் ஆசை தலைக்கேறிவிட்டது. குருவான அகஸ்திய முனிவரின் சாளக்கிராமத்தை எடுத்து அந்தப் பழக் கொத்தை நோக்கி வீசினன். பழம் விழுந்தது. ஆவலுடன் கையை ஏந்தினன். அவன் எதிர்பார்த்தபடியே நசுங்காமல் கையில் பழம் விழுந்தது. ஆனல், அந்தோ! சாளக்கிராமம் கிளையில் சிக்கிக்கொண்டது!

அந்தக் கிளைக்கு அருகில் பொந்தில் ஒரு பாம்பு இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதனல் ஒருவரும் மரமேறத் துணியவில்லை.

சாளக்கிராமம் கிளையில் சிக்கிக் கொண்டதனல் சிறுவன் சுதீட்சணனுக்குப் பயத்தால் நெஞ்சு துடித்தது. குருவுக்கு அவன் இப்போது என்ன பதில்சொல்வான்? அவனது குழந்தையுள்ளத்தில் ஒரு யோசனை உதித்தது. அந்த நாவற்பழமும் சாளக்கிராமம் அளவில்தான் இருக்கிறது. அதற்குச் சந்தனம் இட்டுப் பூஜைப் பெட்டியில் வைத்துவிட்டான்.

சுதீட்சணனின் துரதிர்ஷ்டமோ என்னவோ, அன்று மாலையே குரு திரும்பி விட்டார். மறுநாள் பூஜைப் பெட்டியைத் திறந்து அகஸ்தியர் சாளக்கிராமத்தை எடுத்தபோது கொளகொளவென்று இருக்கவே உற்றுப் பார்த்தார். சீடனிடம் அவர் சாளக்கிராமத்தைக் காட்டி, "இது என்னடா?" என்று அதட்டினர்.

சுதீட்சணன் அதற்கு, "தினம் அபிஷேகம் செய்வதனல் மெதுவாகிவிட்டது. அதற்கு நான் என்ன செய்வது?" என்று சிறிது தயக்கத்தோடு பதில் கூறினன்.

அகஸ்தியர் கோபத்தால் அவனை வெளியே துரத்திவிட்டார்.

அகஸ்தியரிடமிருந்து சென்ற சுதீட்சணன் தண்டகாரண்யத்திலேயே நீண்ட காலம் தவம் செய்து வந்தான். அது காரணமாகச் சுதீட்சணன், வழிபாட்டுக்கு உரிய சுதீட்சண முனிவராக ஆனன்.

ஸ்ரீராமபிரான் பதினன்கு ஆண்டு வனவாச வாழ்க்கை மேற்கொண்டபோது, சுதீட்சணர் தாம் அவரைத் தரிசித்ததுடன் நின்றுவிடவில்லை. குருவான அகஸ்தியருக்கும் காட்ட விரும்பி, ஸ்ரீராமபிரானை அழைத்துக்கொண்டு சென்ருர்.

இவ்விதம் சுதீட்சணர் குருவின் சொற்படி ஸ்ரீமந்நாராயணனுடனேயே திரும்பி வந்தார்.

சரணாகதி

அலங்காரம் தேவராஜன்

மனிதன் உலகில் பிறக்கிறான். பாலனாக வளர்கிறான். கிழவனாகித் தளர்வுறுகிறான். உள்ளே இருக்கும் உயிர் வெளியேறத் துடிக்கிறது. இதை மரணாவஸ்தை என்கிறோம். உடலை விட்டு உயிர் வெளியேறிவிடுகிறது. உடலை அழித்துவிடுகிறார்கள். ஆனால் உடலினுள் இருந்த உயிர் எங்கே சென்றது?

மனிதன் பிறப்பதற்கு முன்பும் துயரமுறுகிறான். மனிதன் தாய்வயிற்றில் கருவாகி, உருவாகி, உயிர் பெற்றுக் கருப்பையிலே



கட்டுண்டு அவயவங்களை நீட்ட முடக்க முடியாமல் மலமூத்திராதிகளிலே அழுந்திக் கண்களால் காண முடியாத நரகவேதனையோடு குழந்தையாகப் பிறக்கிறான். தாய்க்குப் பிரசவ வேதனை; குழந்தைக்கு நரக வேதனை. பிறக்கும் போதும் மனிதன் சொல்லொணாத் துயரத்தோடு குழந்தையாகப் பிறக்கிறான். பிறந்தவுடனே மலமூத்திராதிகளை அகற்றவோ, தினவு எடுத்த இடத்தைச் சொரியவோ, கடித்த இடத்தைத் துடைக்கவோ முடியாமல் திணறுகிறான். அன்னையால் பாலூட்டி நீராட்டிச் சீராட்டிப் பாராட்டப்பெற்று வளர்கிறான். பாலப் பருவத்தில் பல விதமாக விளையாடி யௌவனப் பருவம் அடைகிறான். பருவத்திற் கேற்பத் துணைவியை நாடுகிறான். அவளோடு வாழப் பொருளைத் தேடுகிறான். பொருளைத் தேடுவதற்குத்தான் எவ்வளவு கஷ்டம்? அத்துடன் பிணி பசி தாகம் முதலியவற்றுக்கும் உள்ளாகிறான்.

ஐயோ! பொருளைத் தேடுவதற்குத்தான் எத்தனை பாவம் செய்கிறான்! பாவத்தைத் தொலைக்க அந்தப் பொருளைக் கொண்டு சிறிதளவாவது புண்ணியம்தேடத் தருமம் செய்கிறானா? தருமம் என்பதை நினைப்பதுகூடக் கிடையாதே? பாவம் செய்தவனையும் தருமம் செய்தவனையும் காண்கிறோமே? ஒருவன் அரசனாக இருக்கிறான்; மற்றொருவன் ஆண்டியாக இருக்கிறான். ஒருவன் அறிவாளியாக இருக்கிறான்; மற்றவன் முட்டாளாக இருக்கிறான். படைத்தவனிடம் உள்ள பாகுபாடா இது?

செல்வம் நிலையற்றது; அதனால் அதைப் பெற்றபொழுதே தருமம் செய்ய வேண்டும். நாள் உடலை அறுக்கும் வாளாயிற்றே? இதனை அறியாமலே வாணாட்கள் வீணாட்களாகக் கழிகின்றனவே? இவ்வாறு நாட்கள் மாதமாகி, மாதங்கள் வருடமாகிக் கழிகின்றன.

இளமை நீங்கி முதுமை வருகிறது. அசக்தியால் நடை தளர்ந்து, உடல் மெலிந்து, மனைவிக்கும் மக்களுக்கும் சுமையாக இருந்து உயிர் நீங்கப்பெற்று, உடல் மண்ணோடு கலந்து விடுகிறது. எந்த மனிதனாவது இதனை எண்ணிப் பார்ப்பது உண்டா?

இவ்வாறு இறந்தும் பிறந்தும் இரைக்கே பறந்தும் துன்பத்திலே உழன்று அழிந்து போகும் மனிதனிடத்திலேதான் கடவுளுக்கு எவ்வளவு கருணை! பிறவிக் குருடனுக்குக் கண்ணைக் கொடுத்தது போலவும், இருட்டறையிலே விளக்கேற்றிக் காட்டினாற் போலவும் இறைவன் மனிதனுக்கு வேத விளக்கைக் கொடுத்தான்.

பரம்பொருளை உணர்த்துவதே வேதம். வேதத்தால் உணரப்பெறுவதே பரம்பொருள். பரம்பொருளை அடைவதே மனிதன் கடமை. அதுவே பிறப்பிறப்பை நீக்கும். மனிதர்கள் பரம்பொருளை அடைந்து இன்பமுற வேதம் பல தர்மங்களைக் கூறுகிறது. அதில் முக்கியமானவை, கர்மம் ஞானம் பக்தி பிரபத்தி

என்ற உபாயங்கள். இந்த வழிகளைக் கண்டும் மனித உள்ளம் சிறிதும் அதில் ஈடுபடுவதில்லை. வேதத்தின் உட்பொருளை உணர்ந்து மனிதனும் உய்ய வேண்டும் என்பது பரனின் திருவுள்ளம். மனிதர்கள் வேதத்தைக் கைவிட்டு, அழிந்து போகும் உலக இன்பங்களில் ஈடுபட்டு, அல்லற் படுவதைக் கண்ட பகவான், மனிதனிடம் இரக்கம் கொண்டு தானே இந்தப் பூவுலகில் அவதரிக்கிறுன். அவதாரம் என்பது உயர்ந்த வன் தன்னைத் தாழ்த்திக்கொண்டு இந்தப் பூவுலகில் தன் இச்சையினுல் பிறப்பது.

கண்ணன் தன் அவதாரத்தின் பிரயோஜனத் தைத் தானே கூறுகிறுன். சாதுக்களைக் காப்பது, துஷ்டர்களை ஒழிப்பது, தர்மத்தை நிலைநிறுத்து வது. இதில் முதல் இரண்டையும் இருந்த இடத்திலிருந்து அவன் நினைத்த மாத்திரத்தில் செய்யலாம். மூன்றுவதான தர்ம ஸம்ஸ் தாபனத்தை அப்படிச் செய்ய இயலாது. தான் பிறந்து தன் ஒழுக்கத்தினுலும் உபதேசங் களினுலும் தர்மங்களை நிலைநாட்டுவதே அவனது அவதாரங்களின் முக்கிய நோக்கம்.

வேதம் கூறிய கர்மம் ஞானம் பக்தி பிரபத்தி என்ற தர்மங்களில் கர்மயோகம், தன் முயற்சி யினுல் திருமாலின் உகப்புக்காகச் செய்யப் பெறுவது. ஞானயோகம், ஜீவாத்மாவைச் சிந்திப்பது. பரமாத்மாவைச் சிந்திப்பது பக்தி யோகம். இவை மூன்றும் நம் சக்திக்கும் ஞானத்திற்கும் பொருந்தாதவை. எனவே அவற்றை விட்டுக் கடைசியாகச் சொன்ன பிரபத்தியே சிறந்த தர்மம். பிரபத்தி, சரணு கதி, பரந்யாஸம், பரஸமர்ப்பணம் இவை அனைத்துக்கும் ஒரே பொருள். வேதபுருஷனும் அநேக தர்மங்களைச் சொல்லி வந்து, முடிவிலே சரணுகதியையே சிறந்த தர்மமாக வெளி யிட்டிருக்கிறுன்.

வேதப் பொருளான இறைவன் தசரத குமாரனுகப் பிறந்தபோது, வேதம் தானும் வால்மீகியினிடமிருந்து ராமாயணமாக வெளிப் பட்டது. சர்வேசுவரன் ராமனுக அவதரித்துச் சரணுகதி தர்மத்தை நிலைநாட்டுகிறுன். மற்றத் தர்மங்களைக்காட்டிலும் சரணுகதியே உயர்ந் தது என்று தெரிந்துகொள்ள, ராமாயணம் நமக்கு இன்றியமையாதது. பகவான் ராமனுகப் பிறந்து தன் ஒழுக்கத்தினுலும் உபதேசங்களி னுலும் மனிதனை உயர்த்துகிறுன். அவன் அனுஷ்டித்துக் காட்டியதே சரணுகதியாகும்.

சரணுகதி

ஒருவன் எண்ணற்ற குற்றங்களைச் செய் கிறுன். அவன் தண்டனைக்கு உள்ளாகிறுன். அவன் அந்தத் தண்டனையிலிருந்து விடுபட அரசன் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்கிறுன். அதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. நமது நிலையும் அதே போன்றதுதான். ஒரு சமயம் அரசனைக்கூட ஏமாற்றிவிடலாம். ஆண்டவனை ஒரு நாளும் ஏமாற்ற முடியாது. இறைவன் கல்மனமுடையவனுக இருந்தால் அவன் காலைப் பிடித்துக் காரியம் கொள்ள முடியாது. அவனே குணபரிபூர்ணன், பரம தயாளன். நாமோ பகவானது தண்டனைக்கு உள்ளானவர்கள். ஆகையால் நமக்குச் சரணு கதிதான் உபாயம். 'நான் உன்னைத் தவிர வேறு கதி இல்லாதவன். நீயே எனக்கு நற்கதி அருள வேண்டும்' என்று பிரார்த்திப்பதுதான் சரணு கதி. எம்பெருமான் சரணமே கதியாக இருப் பதே சரணுகதி. இதைத்தான் நமக்கு ராமாயணம் காண்பிக்கிறது.

அடுத்த இதழில், ராமாயணம் புகட்டும் சரணுகதி தத்துவம் குறித்து விரிவாகப் பார்க்கப் போகிறேம்.

அதிகமான சிரிப்பு, அறிவு சூன்யத்தையே காட்டும். — கோல்டுஸ்மித்

ஜனங்களிடையே இரக்கமும் சகோதர அனுதாபமுமே மனித வாழ்வில் பெறு வதற்காக முயல வேண்டிய பேருணர்ச்சிகள். — மார்லி

நல்லவர்களின் புத்திமதியைப் புறக்கணித்துத் துஷ்டர்களின் யோசனையைப் பின் பற்றுகிறவன் உயிரைக் காப்பாற்ற முடியாது. கண்டதைத் தின்னும் நோயாளியைப் போன்றவன் அவன். — பஞ்சதந்திரம்

தியான வேளையிலே....

எப்.ஜே.அலெக்சாண்டர்

மௌனத்தில் குடிகொண்டிருக்கும் அந்தக் குரல் தியானகாலங்களில் பேசி என் ஆத்மா விடம் கூறியதாவது :—

"வா மகனே, வா. ஆழ்ந்த, மிகமிக ஆழ்ந்த அமைதிக்கு உள்ளே வா. தான் என்னும் தன்மையின் (வியக்தியின்) அமளி துமளிகளுக்கு அப்பால், அதன் நாநாவித அனுபவங்களுக்கும் அப்பால் விளங்கும் அத்யந்த சாந்தநிலைக்கு உள்ளே வந்துவிடு. மேற்பரப்பில் வீசும் மன எழுச்சி அல்லது ஆசைப் புயல்களால் மனம் கலங்காதே. கருமுகில்கள் என்னதான் கனத்திருந்தபோதிலும், அவற்றுக்கெல்லாம் அப்பால், கதிரவன் ஒளி வீசவே செய்கிருன். ஆழ்ந்த நிச்சப்தத்தில்தான் இதயம் அந்தரங்க ஆனந்தத் துடிப்புக் கொள்கிறது. எங்கும் நிறைந்திருக்கும் ஓர் அன்பு உன் உள்ளே பாயும் வகையில் உன் இதயத்தைத் திறந்து வைத்துக் கொள். ஆகா! ஆழ்ந்த அமைதியின் இன்னிசை தான் என்னே! எப்பேர்ப்பட்ட சாந்தத்தை அது உண்டாக்கிவிடுகிறது! ஆகா! அந்த எல்லையற்ற சாந்தியை நான் அடைவேனு!

"எல்லையற்றதாக இருந்து கொண்டிருக்கும் காலத்திலே, ஒரு நல்லெண்ணமும் ஓர் ஆன்மிகத் துடிப்பும்கூட வீண்போவதில்லை. ஆகவே, காலத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வரையறைகளையெல்லாம் கடந்து அப்பால் செல்வாயாக. அங்கேதான் நீ மகத்தான உயர்ந்த எண்ணங்களை எண்ண முடியும்; அங்கேதான் உன் ஆத்மா எல்லையற்ற பரம்பொருளுக்கு ஆசை கொள்ள இயலும். உன் மனதிற்குள்ளேயே தான், உன் உலகம் இருந்துகொண்டிருக்கிறது. சங்கிலித் தொடர் போல வரும் காலத்திற்குள்ளேகூட, காலத்தின் வரையறைகளைக் கடந்து விளங்கும் பரம்பொருளை உனக்குப் புலப்படும்படி உன்னுல் செய்துவிட முடியும்; அதாவது உன் சிந்தனைகளால், எங்கும் பரந்த வெளி என்ற வரம்புகளைக் கடந்து நீ செல்ல முடியும்.

"ஆகா! ஆத்மா சுதந்திரமானது, கட்டற்றது, எதுவுமே அதைப் பந்தத்திற்கு உட்படுத்த முடியாது என்ற ஞானத்துடன் என்ன மகத்தான சக்தி, எத்தகைய மேலான புனித உணர்ச்சி, அபரிமிதமான ஒன்றை அளவிட முடியாதபடி உணரும் எப்படிப்பட்ட ஆச்சரிய உணர்ச்சி, எல்லாம் வருகின்றன! நீ வருகிருயா அல்லது போகிருயா? நீ ஒன்றைச் செய்கிருயா அல்லது செய்யாமல் போகிருயா — இவை எல்லாம் ஒரு பொருட்டா என்ன! காரணம், இவையெல்லாம் வாழ்க்கை என்ற பெரிய கனவுக்குள் காணும் கிளைக்கதைகள்தாமே; சதா ஓடிக்கொண்டேயிருக்கும் பெருநதியாம் கால வெள்ளத்தினுள்ளே தோன்றும் நீரோட்டங்கள் தாமே; இவையோ இப்படி இருக்க, சுத்தாத்மா ஒன்றேதான் நித்திய வஸ்துவாக இலங்குகிறது.

"ஆழத்திலே — இன்னும் ஆழத்திலே — அளவிடவே இயலாத மிகமிக ஆழத்திலே பேரமைதி குடிகொண்டிருக்கிறது; அத்யந்த சாந்தியோ அளவிடவே முடியாதது. புலனும் எண்ணமும் தோற்றுவிக்கும் உருவங்களையெல்லாம், நாமரூபங்களையெல்லாம் அழித்துவிடு. அவை எல்லாம் பேரொளியின் சிதறல்களே, ஒளிக்கீற்றுகளே. நீ பேரொளிக்குள்ளேயே செல்வாயாக!"

அந்தக் குரல் மேலும் கூறியதாவது:—

"ஆகா! அந்தச் சுத்தான்மாவிலே பந்தத்திற்கு உட்பட்ட ஜீவாத்மாவின் உணர்வே இல்லை; வரம்பற்றதாய், நித்தியமாய், எல்லாப் பந்தங்களிலிருந்தும் விடுபட்டதாய், முழு அளவில்

சுதந்திரம் கொண்டதாய் அந்தச் சுத்தான்மா விளங்குகிறது. அநேகத்துவம் என்பதே அறியாத ஏகத்துவம் அது. இரண்டற்ற ஒன்று அது; நானுவித பேதரூபம் அறியாத ஒன்றேயான பொருள் அது. அந்தச் சுத்தான்மாவின் ஆட்சியில் நீ நான் அவன் என்பதற்கெல்லாம் இடமில்லை. அது அதுவாகவே இருக்கிறது — ஒப்பிட முடியாத, உரை கடந்த, 'ஓம் தத் ஸத்' என்று சொல்லப்படும் பரவஸ்து அது. எவனெருவன் அந்தச் சுத்தான்ம வஸ்துவைச் சுவானுபூதியில் அறிகிருனே, அவனே, ஆம், அவனே மெய்யாக அறிகிருன்; அவன்தான் உண்மையான ஞானி.

விடுதலை அடைந்துவிட வேண்டும் என்ற துடிப்பு, எல்லையற்று விளங்கும் பரம்பொருளுடன் இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்ற பரிதவிப்பு — இதுதான் உண்மை அன்பு என்பது. பேரமைதி எனப்படும் சாந்தியைப் பெற்று அதிலேயே ஆழ்ந்துவிட வேண்டும் என்ற பேரவாதான் உண்மை அன்பு. அது அசைக்க முடியாதது, நிலைகுலையாதது. அந்த அன்பு சந்தடியின்றி, ஆனல் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக்கொண்டு உயர்ந்து உயர்ந்து முன்னேக்கிச் சென்று பரம்பொருளை எட்டிப் பிடித்துவிடுகிறது. அது தடுக்க முடியாதது. அது லட்சியத்தை அடைந்துவிடுகிறது. எந்த ஓர் பொருளிலே எல்லாத் தெய்வங்களும் இரண்டறக் கலந்துவிடுகிறர்களோ, எதிலே எல்லா விதமான சப்தங்களும் தேய்ந்து ஒடுங்கிவிடுகின்றனவோ, எதனுள்ளே உருவங்களெல்லாம் விழுங்கப்பட்டு விடுகின்றனவோ, எதனுள்ளே சிந்தனைகள் சிந்திக்கப்படாமலே இருக்கின்றனவோ, எதனுள்ளே வாழ்க்கை என்பதும் மரணம் என்பதும் இல்லாதொழிகின்றனவோ, — அதுதான், அந்தப் பரவஸ்துதான் சுத்தான்மா என்பதை அறிந்துகொள்வாயாக. எதில் போராட்டம் நின்றுவிடுகிறதோ, எதில் ஆத்மானுபூதி அல்லது சாட்சாத்காரம் உள்ளதோ, எதில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது உயர்வு தாழ்வு என்றெல்லாம் இல்லாமல் அழிக்கப்பட்டுவிடுகிறதோ, எதில் சௌந்தரியமும் புனிதமும், பாவமும் பயங்கரமும், நல்லதும் அல்லதும் வேறுபாடு இழந்துவிடுகின்றனவோ, எதில் தியானத்தில் ஆழ்ந்த மனது சர்வக்ஞத்தைப் பெற்றுவிடுகிறதோ — அதை, அந்தப் பரம்பொருளைச் சுத்தான்மா என்று அறிந்துகொள்வாயாக.

"என் குழந்தாய், மிகமிக உயர்ந்த பொருள்களுக்கெல்லாம் அப்பால், ஒப்புயர்வற்ற உயர்ந்த உன்னதப் பொருள் ஒன்று இருக்கிறது; உயர் தெய்வங்களுக்கெல்லாம் அப்பால், ஒப்புயர்வற்ற உயர்ந்த தெய்விகச் சக்தி ஒன்று உள்ளது. அழிக்கப்பட முடியாத பொருளின் பின்னணி அங்கேதான் உள்ளது. எல்லாம் மறைந்துவிடுகிறது. எல்லாம் அழிக்கப்பட்டுவிடுகிறது — எது நிலை கொண்டு அழிவற்று நிற்கிறதோ அதுதான் சுத்தான்மா."

பெரிய அந்தக் குரல் ஓய்ந்தபோது, பரந்த வெட்டவெளிக்குள் என் ஆத்மா நுழைந்து உயர்ந்துவிட்டதைப் போன்ற ஓர் உணர்வைப் பெற்றேன். அப்போது 'நான்' என்பது இல்லாதொழிந்தது. ஒளியொன்றே அங்கு இருந்தது — அந்தப் பேரொளி!

பிரம்மனல் பிரிக்கப்பட்டு, கிரமமாகத் தேளின் கொடுக்கிலும், பாம்பின் வாயிலும் துஷ்டர்களின் இதயத்திலும் விஷம் வைக்கப்பட்டது. — ஒரு சுலோகம்

நல்ல நண்பருக்கு அடுத்த படியில் ஸ்தானம் வகிப்பவை நல்ல நூல்களே.
— கோல்ட்டன்

நல்லொழுக்கமும் நீதியும் நாஸ்திகர்களுக்கும் அவசியமாகும். — அசோக சக்ரவர்த்தி

உலகத்தாருக்கு நீ அளிப்பது உன் நன்னடத்தை. உலகத்தாரிடமிருந்து நீ பெறுவது புகழ். இந்த உண்மையை நீ எப்போது உணருகிருயோ அப்போதுதான் நீ வாழ ஆரம்பிக்கிருய்.
— பி. டெய்லர்

மனத்தடுமாற்றம் உள்ளவனுக்கு நல்லோர் கூட்டுறவு போன்ற பரிகாரம் வேறில்லை.
— அக்பர் சக்ரவர்த்தி

இந்தியா குடிசைகளில் வாழ்கிறது!



சுவாமி விவேகானந்தர்

சமிபத்தில் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களின் தொகுப்பாக Rebuild India என்ற ஆங்கில நூல் வெளியாகியுள்ளது. அந்த நூலின் ஆரம்பத்திலுள்ள பகுதியே இங்குத் தரப்படுகிறது.

நமது இந்தப் புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் சமயமும் சாஸ்திரமும் தழைத்து வளர்ந்தன. மகான்களுக்குப் பிறப்பளித்த தேசமும் தியாகபூமியும் நமது நாடேயாகும். மிகப் பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை மனித வாழ்க்கையின் மகத்தான இலட்சியம் விளங்கி வந்திருப்பது இந்த நாட்டிலேதான்.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சிறப்பியல்பு, ஒரு தனிப்பட்ட நோக்கம் உண்டு. அதைத் தவிர மற்றவை எல்லாம் அந்த நாட்டிற்கு இரண்டாம் தரமான முக்கியத்துவம் உடையவையாகவே இருக்கும். இந்தியாவின் உயிர் நாடியாக விளங்கும் சிறப்பியல்பு அதன் மதமாகும். சமூகச் சீர்திருத்தமும் மற்றவையும் இந்தியாவிற்கு இரண்டாம் தரமான முக்கியத்துவம் உடையவையே ஆகும்.

நமது நாட்டின் உயிர் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்த்தால் சாம்பல் பூத்து இறந்துவிட்டதைப் போலக் காணப்படுகிறது. ஆனல் அதனடியில் நெருப்பைப் போன்று அது இன்னும் கனன்று எரிந்துகொண்டிருக்கிறது. நமது நாட்டின் வாழ்க்கை மதத்தில்தான் அமைந்திருக்கிறது. அதன் மொழியும் மதம் தான்; மதமே அதனுடைய கருத்துக்கள்; அதனுடைய அரசியல், சமுதாயம், நகராட்சி மன்ற அமைப்புகள், பிளேக் தடுப்பு வேலைகள், பஞ்ச நிவாரணப் பணிகள் — ஆகிய இவை எல்லாமே மதத்தின் மூலமாகத்தான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இனிமேலும் அப்படியே நடத்தப்பட வேண்டும். அவ்விதம் இந்தப் பணிகள் நடத்தப்படாவிட்டால் எனது நண்பரே, உம்முடைய எல்லாக் கூச்சல்களும் புலம்பல்களும் ஒன்றுமே இல்லாமல் பயனற்றவையாக முடிந்து போகும்.

இந்திய மக்களாகிய நீங்கள் உங்கள் மதத்தை மட்டும் புறக்கணித்துவிட்டு அரசியல் சமூக ஏற்பாடு முதலியவற்றுள் எதனை உங்கள் நடுநோக்கமாய், தேசிய வாழ்க்கையின் உயிர் நாடியாக வைத்துக்கொண்டாலும், அதன் முடிவு நீங்கள் அடியோடு அழிந்து விடுவதாகவே இருக்கும்.

உலக வரலாற்றைக் கூர்ந்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு ஓர் உண்மை தென்படுகிறது. அதாவது, இயற்கையின் விதிமுறைக்கு இணங்க, பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர ஜாதிகள் நான்கும் ஒவ்வொரு சமூகத்திலும் ஒன்றன்பின் ஒன்ருக முறையே உலகத்தை ஆண்டு வருகின்றன.

சமுதாயத்தின் தலைமைப் பதவி கல்வியைத் தமது சுய உரிமை என்று கொண்டாடுபவர்களின் கையிலோ, செல்வத்தின் சக்தியையோ ஆயுத வலிமையையோ கையாள்பவர்களின் கையிலோ இருப்பினும், அதன் சக்திக்கு மூலம் எப்போதும் குடிமக்களே ஆவர்.

உலகிலுள்ள அத்தனை முன்னேற்றத்திற்கும் தங்களின் இதயத்தின் இரத்தத்தைக்கொடுத்து உழைத்திருக்கிருர்களே பாமர மக்கள், அவர்களைப் புகழ்வதற்கு யார் இருக்கிருர்கள்? ஆன்மிகத்திலும் யுத்தத்திலும் கவிதையிலும் உலகை வென்ற தீரர்களே எல்லோருடைய கவனத்தையும் கவர்கிருர்கள். அவர்களே மனித

குலத்தின் மரியாதைகளையும் பெறுகிறார்கள். ஆனால், கவனிப்பாரின்றி, ஊக்குவிப்பாரின்றி, வெறுப்பையே பெறும் சூழ்நிலையில் வாழ்ந்து எல்லையற்ற பொறுமையும், அளவற்ற அன்பும், உறுதி தளராத உழைப்பும் கொண்டு நம் பாமர மக்கள் தங்கள் வீடுகளில் தங்கள் கடமையை இரவும் பகலும் சிறிதும் முணுமுணுப்பின்றிச் செய்து வருகிறார்கள்! அவர்களின் இந்த வாழ்க்கையில் வீரம் இல்லையா?

உழவர், சக்கிலியர், புலையர் என்னும் ஏழை ஜாதி மக்களிடம் உங்களுக்கு இருப்பதை விடவும் தொழில்செய்யும் ஆற்றல் நிறைந்திருக்கிறது. உங்களைவிடவும் அவர்களுக்குத் தன்னம்பிக்கை அதிகம் உண்டு. நீண்ட நெடுங்காலமாக வாய்திறந்து ஒரு வார்த்தையும் பேசாமல் அவர்கள் உழைத்து நாட்டிலுள்ள செல்வம் முழுவதையும் திரட்டி வைத்தார்கள்.

உங்களைப் போலச் சில புத்தகங்களை அவர்கள் படிக்கவில்லை என்றும், உடையளவில் இருக்கும் நாகரிகத்தை அவர்கள் வளர்த்துக் கொள்ளவில்லை என்றும் அவர்களைப்பற்றித் தாழ்வாக நினைத்துவிடாதீர்கள். இந்தச் சில புத்தகப் படிப்பும் உடையலங்காரமும் அவர்களுக்கு இல்லாததனால் என்ன போயிற்று? எல்லா நாடுகளிலும் நாட்டின் ஆதாரமான முதுகெலும்பாக இருப்பவர்கள் அந்த நாட்டின் தொழில் செய்யும் மக்களே ஆவர். தாழ்ந்த வகுப்பார் என்று நீங்கள் நினைக்கிற இவர்கள் தமது தொழில் செய்வதை நிறுத்தி விடுவார்களேயானால், உங்களுக்கு உணவும் உடையும் எங்கேயிருந்து வரும்? கல்கத்தா நகரத்திலுள்ள தோட்டிகள் ஒரு நாளைக்குத் தங்கள் வேலையை நிறுத்திவிட்டால், எல்லோருக்கும் பயம் ஏற்பட்டுவிடுகிறது. தொடர்ந்து அவர்கள் மூன்று நாட்களுக்கு வேலை நிறுத்திவிட்டாலோ தொற்று வியாதிகள் தோன்றி நகரம் முழுவதையும் அழித்துவிடும். பலவேறு தொழில் செய்யும் தொழிலாளர்கள் தொழில்களை நிறுத்திவிடுவார்களேயானால், உங்களுக்கு வேண்டிய உணவும் உடையுங்கூட உங்களுக்குக் கிடைக்காமலே போகும். இத்தகைய மக்களைத் தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லி நீங்கள் உங்கள் பண்பாட்டைப் பெரிதாகப் புகழ்ந்து கொள்கிறீர்களே!

உழைக்கும் பாமர மக்களாகிய இவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஒருவித முணுமுணுப்புமின்றி எண்ணற்ற கொடுமைகளைச் சகித்து வந்திருக்கிறார்கள்; அதன் விளைவாக இன்று தளராத மனவுறுதியைப் பெற்றிருக்கிறார்கள். எல்லையற்ற துன்பங்களை அனுபவித்ததன் விளைவாக இன்று அவர்கள் அழியாத ஊக்கத்தைப் பெற்றுவிட்டார்கள். ஒருபிடிச் சோற்றை உண்டு வாழும் அவர்கள், உலகையே ஆட்டிவைக்கும் வல்லமை பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சி கிடைத்தாலும் அதுவே போதும், அகில உலகமும் அவர்களுடைய சக்தியைத் தாங்காது. இரத்த பீஜன்* என்ற அசுரனைப் போல, வற்றாத உயிர்ச் சக்தி நிரம்பியவர்களாக அவர்கள் திகழ்கின்றனர். இது மட்டுமன்றி, தூய்மையாகவும் நல்லொழுக்கத்துடனும் வாழ்வதனால் ஏற்படக் கூடிய அற்புதமான மனவலிமையும் அவர்களிடம் உள்ளது. இதை உலகில் வேறெங்குமே காண இயலாது. இதைப் போன்ற அமைதியும், திருப்தியும், அன்பும், பொறுமையுடன் கூடிய இடைவிடாத உழைப்பும், நெருக்கடியான சமயங்களில் காட்டும் சிங்கம் போன்ற பலமும் வேறு எங்கே காண முடியும்?

மகத்தான ஒரு செயலைச் செய்யும் வாய்ப்பு ஏற்படும்போது பலரும் தீரர்களாக மாறுவது சுலபம். ஆயிரக்கணக்கான மக்கள் கைதட்டிப் புகழக் காத்திருக்கும்போது ஒரு கோழையும் தன் உயிரைத் தியாகம் செய்யலாம். சுயநலமே உருவானவன் சுயநலமற்றவனாக நடந்து கொள்ளலாம். எவருமே கவனிக்காத ஒரு சிறிய காரியத்தைச் செய்யும்போதும் எவனொருவன் அதே அளவில் கடமையில் கருத்தும் சுயநலமின்மையும் கொண்டிருக்கிறானோ, அவனே உண்மையில் கடவுளின் ஆசிக்குரியவன் ஆவான். அத்தகைய உண்மை வீரர்களாகிய இந்தியாவின் உழைப்பாளி மக்களே, எல்லாக் காலத்திலும் மிதியுண்டு கிடக்கும் உங்களை நான் வணங்குகிறேன்.

இந்த உலக வாழ்க்கையைப் பற்றிய விஷயம் எதையுமே நம்முடைய பொதுமக்கள் உணரவில்லை. அறியாமைதான் அவர்களைச் சூழ்ந்து நிற்கிறது. நம்முடைய பொதுமக்கள் மிகவும் நல்லவர்கள். ஏனென்றால் நமது நாட்டில் வறுமை ஒரு குற்றமாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் கொடூரமாக நடந்து கொள்ளும் இயல்புடையவர்கள் அல்லர். எனது உடை காரணமாக—அமெரிக்காவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி—பலமுறை மக்கள் கூச்சலிட்டு என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். ஒரு தனிப்பட்ட உடையை அணிந்து கொண்டதற்காக இந்தியாவில் மக்கள் ஒருவனைச் சூழ்ந்துகொண்டார்கள் என்ற நிகழ்ச்சியை நான் இதுவரை கேட்டதே இல்லை.

மேலைநாட்டு ஏழைமக்களைப் பேய்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களோடு ஒப்பிட்டால் நம் நாட்டு ஏழைமக்களைத் தேவதூதர்கள் என்றே சொல்ல வேண்டும். ஆகவே, நமது ஏழைமக்களின் நிலையைச் சுலபமாக உயர்த்திவிடலாம். நம் நாட்டுப் பொதுமக்கள் எல்லாவிதத்திலும் ஐரோப்பிய நாட்டுப் பொதுமக்களைவிட நாகரிகம் வாய்ந்தவர்களே ஆவர்.

* இரத்தபீஜன் என்ற ஓர் அசுரனது ஒவ்வொரு துளி இரத்தத்திலிருந்தும் அவனைப் போன்ற ஒவ்வோர் அசுரன் தோன்றியதாக துர்க்கா சப்தசதியில் கூறப்பட்டுள்ளது,

ஜாம்பவான்


நரேந்திரன்

படைப்புக் கடவுளான பிரம்மதேவர் தம் தொழிலைச் செய்துகொண்டிருந்தபோது ஒரு சமயம் அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'நாம் இவ்விதம் ஒரு காரியத்தில் ஈடுபட்டிருப்பதனால் நம் முழுநேரத்தையும் பகவானின் பணிக்காகச் செலவிட முடியவில்லையே! இதற்கு என்ன செய்யலாம்?' என்று அவர் நினைத்தார்.

உடனே அவர் தமது ஓர் உருவமாகக் கரடியின் வடிவம் கொண்டு ஜாம்பவான் என்ற பெயரில் பூமியில் வந்து தோன்றினார். கடவுளுக்கே தொண்டு புரிவது, கடவுளின் பேரின்ப எழிலையே தியானிப்பது, கடவுளின் அரும் பெரும் லீலைகளையே இடையறாமல் நினைப்பது— இவ்வாறாக ஜாம்பவான் நாட்களைக் கழிக்கலானார். அதாவது இரவும் பகலும் ஆண்டவனின் நினைவாகவே இருந்து வந்தார்.

சத்திய யுகத்தில் கடவுள் வாமனராகத் தோன்றினார். அப்போது அவர் பலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் அளப்பதற்காக விசுவரூபம் எடுத்தார். அதன் பயனாக, பலியும் உன்னதநிலை பெற முடிந்தது. அப்போது ஜாம்பவனுக்குப் பகவானின் மிகப் பெரிய உருவத்தைக் கண்டு நிலைகால் புரியாத அளவிற்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. உடனே பேரிகையை எடுத்து ஜயகோஷம் செய்தார். ஜயகோஷம் செய்துகொண்டே ஜாம்பவான் எல்லாத் திசைகளுக்கும் விரைவாகச் சென்று விழாக் கொண்டாடினார். இவ்வாறு ஓடிக்கொண்டு இரண்டே மணிநேரத்தில் பகவானின் விசுவரூபத்தை ஏழு தடவை சுற்றி வந்துவிட்டார்! பக்திப் பரவசத்தில் தோய்ந்திருந்த அவரது உள்ளத்தின் பாங்கை இந்த நிகழ்ச்சி நமக்கு எளிதாக உணர்த்துகிறது.

திரேதாயுகத்தில் ஜாம்பவான் வானர அரசனான சுக்கிரீவனுக்கு அமைச்சராக விளங்கினார். வயது, அறிவு, உடல்வலிமை, நீதி வழங்கும் தன்மை ஆகியவற்றில் சிறந்து விளங்கிய அவரால்தான் அனைவருக்கும் தகுந்த ஆலோசனை கூற முடிந்தது. வானரவீரர்கள் சீதையைத் தேடிச் சென்றபோது கரைகாணாத சமுத்திரத்தைப் பார்த்துச் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டனர். அப்பொழுது ஜாம்பவான் அனுமாருக்கு அவரது பலத்தின் பெருமையை உணர்த்தி, அவரை இலங்கைக்குப் போகும்படி செய்தார். ராம—ராவண யுத்தத்



தின் போது ஜாம்பவான் ஸ்ரீராமபிரானுக்குச் சிறந்த அமைச்சராக விளங்கினார். ஸ்ரீராமபிரானும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஜாம்பவானின் ஆலோசனையைப் பெற்றதுடன் அவரை மிகவும் மரியாதையுடன் நடத்தி வந்தார். போர்க்களத்தில் மேகநாதன் (ராவணனின் மகனான இந்திரஜித்) தன் மாயையினால் அனைவரையும் துன்பத்திற்கு உள்ளாக்கினான். ஆனால் அப்போது அவனது மாயையினால் பாதிக்கப்படாத ஒரே ஒரு வீரராக ஜாம்பவான் திகழ்ந்தார். ஜாம்பவான் ஒரு குத்து விட்டபோது மேகநாதன் என்ன, ராவணன்கூட மூர்ச்சித்து விழுந்துவிட்டான்!

ராமர் சீதையுடன் அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டார். அதன்பின் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக அயோத்தியிலிருந்து விடைபெற்றுச் சென்றனர். ஸ்ரீராகவன் அனைவரையும் வழியனுப்பி வைத்துக்கொண்டே வந்தார். ஜாம்பவானின் முறை வந்தது. ஜாம்பவானோ ஸ்ரீராமபிரானை விட்டுப் பிரிய மனமின்றிக் கண்களில் நீர்மல்க நின்றார். ஆனால் உலகச்சந்தடிகளுக்கு அப்பாற்பட்டுத் தனித்திருந்து தவம் புரிய வேண்டும்

என்ற ஞானவேட்கையும் அவரிடம் இருந்தது. சகல ஜீவன்களின் எண்ண ஓட்டத்தையும் நன்கறிந்த இறைவனுக்கு ஜாம்பவான் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிப்பது தெரிந்தது. தமக்கே உரிய புன்முறுவலுடன் எம்பெருமான், ஜாம்பவான் எங்கு இருந்தாலும் அவருடைய நெஞ்சில் தாம் இருப்பதாகவும், துவாபர யுகத்தில் மறுபடியும் நேருக்கு நேராகக் காட்சி தருவதாகவும் வாக்களித்தார். இதன் பின்பு தான் ஒருவாறாக ஜாம்பவான் அயோத்தியிலிருந்து புறப்பட்டார்.

ஜாம்பவான் துவந்த யுத்தம் செய்வதில் மிகவும் வல்லவர். அவரது மனதில் யாருடனாவது நன்றாக மல்யுத்தம் செய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவருக்குச் சமமாக மல்யுத்தம் செய்யக்கூடிய வீரர் எவருமே இருக்கவில்லை. ராவணன்கூட அவரோடு மற்போர் புரிய இயலாமற் போய்விட்டது. எனவே எம்பெருமான் பக்தனின் இந்த ஆசையை நிறைவேற்றி வைக்கத் திருவுள்ளம் கொண்டார்.

துவாபர யுகம் வந்தது. ஸ்ரீகிருஷ்ணபகவான் யது குலத்தில் தோன்றினார். யாதவர்களில் சிறந்த ஸத்ராஜித் என்பவர் சூரியனை வழிபட்டு அவரை மகிழ்வித்து, சூரியனிடமிருந்து ஸ்யமந்தக மணி என்ற ஒப்பற்ற இரத்தினத்தைப் பெற்றார். அதை அறிந்த கண்ணபிரான் அந்த மணியை உக்ரஸேன மகாராஜாவுக்கு அளித்துவிடும்படி ஆலோசனை கூறினார். ஆனால் ஆசை யாரை விட்டது? அந்த மணியை உக்ரஸேனருக்கு அளிக்க மனமின்றி ஸத்ராஜித் தாமே அதை வைத்துக்கொண்டார்.

ஊழ்வினை காரணமாக ஒரு நாள் ஸத்ராஜித்தின் சகோதரனான பிரசேனன், ஒளிபொருந்திய அந்த மணியைக் கழுத்தில் அணிந்துகொண்டு வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கு ஒரு சிங்கத்தால் அவன் கொல்லப்பட்டான். சிங்கம் அந்த மணியை எடுத்துக் கொண்டு ஒரு குகைக்குள் சென்றுவிட்டது. அந்தக் குகையில் இருந்த ஜாம்பவான் சிங்கத்தைக் கொன்று, ஸ்யமந்தக மணியைத் தம் வளர்ப்பு மகளுக்கு அணிந்துகொள்ளக் கொடுத்தார்.

இந்த விஷயம் இவ்வாறு இருந்தபோது, துவாரகையில் ஸத்ராஜித், வேட்டைக்குச் சென்ற தம்பி பிரசேனன் திரும்பவில்லையே என்று கவலைப்பட்டார். நாட்கள் பல ஓடி மறைந்தன. பிரசேனன் நாடு திரும்பவில்லை. 'ஒருகால் மணியின் மீது கொண்ட ஆசையினால் கண்ணனே பிரசேனனைக் கொன்றுவிட்டு மணியை எடுத்துக்கொண்டிருப்பானோ?' என்ற சந்தேகம் ஸத்ராஜித்திற்கு ஏற்பட்டது. படைவீரர் பலரைக் கொண்டு தேடிப் பார்த்தும், பிரசேனனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்குப் பாதி ராஜ்யம் தருவதாகப் பறையறைவித்தும் பிரசேனன் கிடைக்கவில்லை. எனவே கண்ணபிரான் மீது ஸத்ராஜித் தாம் கொண்ட சந்தேகத்தை ஊர்ஜிதமாக்கிக்கொண்டு பலரிடமும் அவரைப் பழிகூறியபடி இருந்தார். இந்த அபாண்டமான பழிச்சொல் காட்டுத் தீப் போல் துவாரகை முழுவதும் பரவியது.

இந்த விஷயம் கண்ணபிரான் காதிலும் எட்டியது. கண்ணபிரான் தம் மீது அபாண்டமாகக் கூறப்படும் பழியைப் போக்கக் கருதிப் பிரசேனனைத் தேடப் புறப்பட்டார். அவர் தேடிச் சென்ற வழியில் பிரசேனனின் இறந்த குதிரையைக் கண்டார். அதிலிருந்து துவங்கிய சிங்கத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஜாம்பவானின் குகையை அடைந்தார்.

குகையில் இருந்த ஜாம்பவானின் வளர்ப்பு மகளான ஜாம்பவதி, முன்பின் அறிமுகமில்லாத ஆடவரான கிருஷ்ணனைக் கண்டதும் கூச்சலிட்டாள். அவளது கூச்சலைக் கேட்ட ஜாம்பவான் மிகவும் கோபத்துடன் வெளியே வந்தார். ஜாம்பவதி அணிந்திருந்த ஸ்யமந்தக மணியைத் தருமாறு கேட்ட கண்ணனுடன் மல்யுத்தம் துவங்கினார். இருபத்தேழு நாள் இரவு பகலாகத் தொடர்ந்து யுத்தம் நடந்தது. ஒருவருக்கொருவர் சளைக்காமல் குத்துக்கள் விட்டனர். ஆனால் சிறிது சிறிதாக ஜாம்பவானின் பலம் குறைந்துகொண்டு வரத் தலைப்பட்டது. அவர் உடல் மிகவும் சோர்வடைந்துவிட்டது.

சோர்வு என்பதே அறியாத தமக்குச் சோர்வு ஏற்பட்டதைக் கண்ட ஜாம்பவான் தம்மை வெற்றி கொள்ளத் தக்க வலிவுள்ள இந்த வீரன் யாராக இருக்கும் என்ற யோசனையில் மூழ்கினார். 'நிச்சயமாக இவர் தேவனாகவோ அரக்கனாகவோ சாதாரண மனிதனாகவோ இருக்க முடியாது. என் அப்பன் ஸ்ரீராமபிரானாகத்தான் இருக்க வேண்டும்' என்ற தீர்மானத்திற்கு அவர் வந்தார். இந்த முடிவிற்கு வந்தவுடனே ஜாம்பவான் கண்ணனை எதிர்த்துப் போரிடுவதை நிறுத்திவிட்டார். அதே சமயம் பகவான் வில்லுடன் கூடிய தமது ராமாவதாரத் தோற்றத்துடன் ஜாம்பவானுக்குக் காட்சி தந்தார்.

ஜாம்பவான் ஸ்ரீகிருஷ்ணனின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். கண்ணபிரான் ஜாம்பவானின் அடிபட்ட உடலைத் தம் கையால் வருடிக் கொடுத்தார். ஜாம்பவான் மெய் சிலிர்க்க, பக்தி வெள்ளத்தில் தம்மையே மறந்தார். அவரது துன்பங்கள் மறைந்தன.

தமது அருமை மகள் ஜாம்பவதியையும் ஸ்யமந்தக மணியையும் சியாமளவண்ணனான கண்ணபிரானுக்கே பரிசாக ஜாம்பவான் அளித்தார். இவ்விதம் ஜாம்பவான் பக்தர்களுள் சிறந்தவராக ஒளிவிடுகிறார்.

ஸ்ரீ ராமபிரானின் அருளுரைகள்

1. நான் உயிர் வாழும்வரை, ரிஷிகளுக்கு நான் கொடுத்திருக்கும் வாக்குறுதியை மீற மாட்டேன். என் பிராணனையே விட்டாலும் விடுவேன்; சீதையையும் லட்சுமணனையும்கூட விட்டாலும் விடுவேன்; ஆனால் ஒரு பக்த னுக்குக் கொடுத்த வாக்குக்குத் துரோகம் செய்யமாட்டேன்.

2. தூரத்தில் தோன்றும் கானல்நீரைப் பார்த்து, அதைத் தண்ணீர் என்று நினைத்துத் திசைக்குத் திசை தேடி ஓடிக்கொண்டிருக்கும் ஒரு மானின் பரிதாப நிலைக்கும் நம்முடைய நிலைக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை. புலன்கள் நம்மை வஞ்சிக்கின்றன என்பதை நன்றாக அறிந்திருந்தும் மூடர்களாகிய நாம் அந்தப் புலன்களின் அடிமைகள் போலவே நடந்துகொள்ளுகிறோம்.

3. சிரிப்பும் அழுகையும், முதுமையும் மரண மும் திரும்பத் திரும்ப எப்போதும் நடந்த படியே இருக்கின்றன. நினைத்தபடியெல்லாம் வீசியடிக்கும் காற்றின் வேகத்தால் தாக்கப் பட்டுச் சிதைந்து போகும் செடிக்கூட்டம் போன்று சிதைந்து தேய்வதே நம்முடைய கதி யாக இருக்கிறது. எதற்கும் உதவாத புலனின்பப் பொருள்களே நம்மை இந்தக் கதிக்கு ஆளாக்குகின்றன. புத்தி இல்லாத மக்கள் இந்த உண்மையை அறிந்துகொள்வ தில்லையே!

4. லௌகிக இன்பங்களெல்லாம் மேகம் கவர்ந்த வானத்தில் தோன்றி மறையும் மின் வெட்டுப் போல, ஒரு கணநேரம் மட்டுமே இருந்து அழிந்துபோகக்கூடியவை.

5. ஸ்தூல உடலுடன் உன்னை நீ ஐக்கியப் படுத்திக்கொண்டிருக்கும் வரையில் உனக்குத் துன்பமும் துயரமுமே கதியாகும். ஆத்மா உடல் அல்ல, புலன் அல்ல, அகங்காரமும் அல்ல. உலகத்தின் துன்பங்களால் நீ பாதிக்கப் படுவதற்குக் காரணம் அவித்யைதான்.

6. கனவு கண்டுகொண்டிருக்கும் வரையில் கனவில் நடைபெறும் நிகழ்ச்சி உண்மை போலவே தோன்றுகிறது. அது போலத்தான், புலன்களையும் அவை தரும் இன்பங்களையுமே சதாகாலமும் சிந்தித்துக்கொண்டிருப்பவனுக்கு இந்த உலகம் உண்மைபோலவே தோன்றுகிறது.

7. சுயநல லாபத்தை மனதில் கொண்டு தான் மனிதன் சம்சாரத்தில் மூழ்குகிறான். ஆனால் சம்சாரமோ பகையும் பேராசையும் பொறாமையும். இவை போன்ற வேறு பல கேடு களுமே நிறைந்திருக்கிறது. மனம்தான் சம்சா ரத்தைத் தோற்றுவிக்கிறது. அதே மனம்தான் சம்சாரத்தில் நம்மைப் பிணைத்தும் வைத்து விடுகிறது.

8. ஒரு பகைவன் இறந்தவுடனே அவனிடம் நாம் கொண்டிருந்த பகையும் மறைந்துவிட வேண்டும். செத்தவனை ஒருநாளும் பகைக்கக் கூடாது.

9. நண்பன் என்ற முறையில் ஒருவன் என் னிடம் வந்தால், அவனை நான் எப்படிப் புறக் கணிக்க முடியும்? அவ்விதம் புறக்கணிப்பது என் விரதத்திற்கு விரோதமாகும். ஒரு தடவை ஒருவன் சரணாகதி செய்துவிட்டால் அவ னுடைய குறைகளையெல்லாம் மனதில் கொள் ளவே கூடாது.

10. சரணம் என்று சொல்லி என்னிடம் வருபவனை நான் ஏமாற்றமடையச் செய்ய மாட்டேன். இது என்னுடைய தர்மம். இவ் விதம் அபயம் அளிப்பதனால் நான் கஷ்டப்பட நேர்ந்தாலும் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். என் உயிரே போவதானாலும் நான் என்னுடைய இந்தக் கடமையைச் செய்துதான் ஆகவேண்டும். இந்தத் தர்மத்திலிருந்து ஒரு போதும் நான் பிறழ மாட்டேன்,

11. என் வாக்குறுதியைக் கேள்: ராவணனே என்னிடம் வந்து அடைக்கலம் வேண்டினுலும் எந்தவிதத் தயக்கமுமின்றி நான் அவனை ஏற்றுக்கொள்வேன்.

12. அடைக்கலம் வேண்டுவோருக்கு அடைக்கலம் அருளாமல் இருப்பது கொடிய குற்றமாகும். சரணமடைபவனுக்குப் புகலிடம் மறுத்தால், அவ்விதம் மறுப்பவனுக்குச் சொர்க்கம் கிட்டாது. அவனுடைய எல்லா மகிமையும் அவனை விட்டு நீங்கிவிடும். அவனுடைய வலிமையும் ஆற்றலும் அவனிடமிருந்து போய் விடும்.

13. கடமைப் பாதையில் செல்பவன் தன் மூத்த சகோதரனையும் தன்னைப் பெற்றவனையும் தன் ஞானசிரியனையும் மூன்று பிதாக்கள் என்றே கருத வேண்டும்.

14. தம்பியையும் மகனையும் நல்ல சீடனையும் தன் சொந்தக் குழந்தைகள் என்று கருத வேண்டும். அதுவே தர்மமாகும்.

15. சான்ருேர்களுக்கும்கூடக் கடமை என்பது எளிதில் புரிந்துகொள்ள இயலாததாக இருக்கிறது. அது சூட்சுமமானது. இதயத்தில் குடிகொண்டிருக்கும் அந்தராத்மாவுக்கே எது சரி, எது தவறு என்பது தெரியும்.

16. எப்போதும் அமைதியாக இரு. பாவம் செய்யாமல் வாழ்ந்து வா. ஒவ்வொரு நாளும் என்னைத் தியானம் செய். சம்சாரம் என்ற இந்தப் பயங்கரக் கடலிலிருந்து நீ கரையேற்றப் படுவாய்.

17. நற்கருமங்களை அவற்றுக்கு உரிய பொருத்தமான காலத்தில் செய்ய வேண்டும். பண்டைய தர்மவிதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்—இந்த இரண்டும் முக்தியை அடைவதற்கு அவசியமான ஒழுக்கங்கள் ஆகும்.

18. ஆனல் நற்கருமங்களையும் அகங்கார உணர்ச்சியுடன் செய்தால், அது காரணமாக உலக பந்தம்தான் விளையும். ஆகவே ஞானம் பெற வேண்டுமானல் கர்வத்தின் நிழலுக்கும் இடம் தராமல் பணி புரிய வேண்டும்.

19. எல்லா ஆசைகளையும் எல்லாவிதப் பற்றுக்களையும் ஒழிப்பது எதுவோ அதுவே சுத்த ஞானமாகும். குறிப்பிட்ட ஒரு சுயநல நோக்கத்துடன் கூடிய எந்தச் செயலையும் விட்டொழித்துவிட வேண்டும். அத்தகைய கர்மம், பிறப்பு இறப்பு என்ற சக்கரத்தில்தான் உன்னைப் பிணைத்து வைக்கும். உண்மையான ஆத்மஞானத்தைப் பெறுவதற்கு அது உதவி செய்யாது; மாருக, தடைதான் செய்யும். ஆகவே அதை விட்டுவிட வேண்டும். ●

அன்பு

சுவாமி ராமதீர்த்தர்

அன்பு என்னும் ஆட்சியைத் தவிர உலகில் வேறு எந்த அரசாங்கமும் நடைபெறவில்லை.

"அன்பு தலைகீழாய்ப் பாய்வதுதான் விரோதம் எனப் பெயர் பெறுகிறது" என்கிருர் கார்லைல்.

சுருங்கிப் போய்விட்ட அன்பே பயமாகும். இல்லையென்ருல் அன்பானது பயத்தை எவ்வாறு வெல்லும்?

சுடுகாட்டில் ஆயிரம் பொன் வைத்திருக்கும் ஒருவன் பூரணபயத்துடன் இருப்பதற்குக் காரணம் என்ன? அன்பு செலுத்தப்பட்ட பொன் இருப்பதுதான் அல்லவா?

சுதந்தர புருஷன் அன்பினது சீரான குணத்தை அனுபவிக்கிருன்.

உண்மையில் இருப்பதெல்லாம் அன்பு எனும் சக்தி ஒன்றேயாதலால் அன்புடன் ஒன்றென உணர்வதுதான் முக்தியும் விடுதலையும்.

பரிபூரண அன்புமயமாவதற்கு அறிந்தோ அறியாமலோ போராடுவதுதான் வாழ்க்கை எனப்படும்.

நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனம்

மாண்புமிகு எம். ஜி. ராமசந்திரன்
தமிழ்நாடு முதலமைச்சர்

[சென்னை, மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் தனது 75-ஆவது ஆண்டு நிறைவு விழாவாகிய முத்துவிழாவை, 1981 பிப்ரவரி 13 முதல் 16 தேதி வரை விமரிசையாகக் கொண்டாடியது.

தமிழக முதல்வர், மாண்புமிகு எம். ஜி. ராமசந்திரன் அவர்கள் 16 ஆம் தேதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துச் சிறப்புரை வழங்கினார். அவரது உரையின் சுருக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.]

அன்பிற்கும் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய இராமகிருஷ்ண மடத்தின் தவத்திரு துறவியர்களே! என்றும் நான் போற்றிப் பெருமைப்படுகின்ற அளவிற்கு என் உள்ளத்திலே இடம் பெற்றிருக்கும் கி.வா.ஜ. அவர்களே! உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி கைலாசம் அவர்களே!

இந்த இராமகிருஷ்ண மிஷனின் மாணவர் இல்லத்திலே படித்து நாட்டிற்கு நல்ல பல பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற முன்னாள் மாணவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இளஞ்சிறார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இராமகிருஷ்ண மிஷனால் நடத்தப்பெறும் இந்தக் கல்வி நிலையம் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக அமைதியான முறையில் சீரிய பணியினை ஆற்றியிருக்கிறது.

ஆன்மிகத் தொண்டும் பொதுநலத் தொண்டும் இரண்டு கண்கள் போல இராமகிருஷ்ண மிஷனுக்கு விளங்கி வருகின்றன என்பதனைத் தற்கால இந்திய வரலாற்றை அறிந்தவர்கள் நன்கு உணர்ந்திருப்பார்கள்.

இராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் நடுநாயகமாகக் கொண்டு இயங்கிவரும் இந்த நிறுவனம் இப்போது முத்துவிழாவைக் கொண்டாடுகிறது. இந்த நிறுவனத்தின் விழாவிற்குத் தலைமை தாங்கி நான் என்ன கூறுவது என்றும், என் தகுதிக்கும் அதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்றும் எண்ணிப் பார்க்கிறேன். இந்த முத்துவிழா நன்னாளில் தலைமை தாங்க வேண்டும் என்று நானாக விரும்பியவன் அல்ல. ஏதோ உங்களுடைய அன்பினால் கட்டுப்பட்டே இப்போது என்னுடைய பேச்சை நான் தொடங்குகிறேன்.

உண்மையிலேயே நான் அவையடக்கத்திற்காக அல்ல, என்னுடைய உள்ளத்திலே இருக்கின்ற உணர்வுகளை எடுத்துச் சொல்கிறேன்: தமிழைக் குறித்தும் இந்த நிறுவனத்தைக் குறித்தும் ஆராய்ச்சி செய்து விளக்கம் தரும் தகுதி படைத்தவர்கள் மத்தியில் தலைமை வகித்து, அவர்கள் பேச்சுக்களுக்குத் திறனாய்வு செய்வது என்பது எவ்வளவு விபரீதமானது என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். எனினும் எனது பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டுக்கொடுக்காமலும், கடமையைச் செய்ய வேண்டும் என்ற பொறுப்பு உணர்வோடும் என் பணியை இப்போது நான் மேற்கொள்கிறேன்.

முத்துவிழாக் கொண்டாடும் இந்த நிறுவனத்தை இத்தனை ஆண்டுகளாகக் கட்டிக் காத்து இதற்கென்று ஒரு தனி நல்ல பெயரை, அந்த நல்ல பெயர் என்பதற்குக் கீழே கோடிட்டு Underline செய்துகொள்ள வேண்டும்; அந்த நல்ல பெயரைக் கொஞ்சமும்கூட மாசு மறுவில்லாமல் எந்தத் தூசுகளும் ஒட்டிக்கொள்ளாமல் காப்பாற்றி வருகிறவர்களை நாம்

வணங்கிப் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் இப் படிப்பட்ட பள்ளிகளைத் தொடர்ந்து நடத்து வது என்பது மிகவும் சிரமமான காரியம். இத் தகைய நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் எவ் வளவோ பெரிய பெரிய தியாகங்களைச் செய் தாக வேண்டும். இங்கே இருக்கின்ற இளஞ் சிறார்களையெல்லாம் ஒரே உணர்வுக்குக் கொண்டு வந்து கட்டுப்பாட்டோடும் கடமை உணர்வுகளோடும் வாழ்வது எப்படி என்பதைக் கற்றுத் தருகின்ற பெரியோர்களைப் பாராட்ட நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த இல்லம் ஏழைச் சிறார்களுக்கு இளமை யிலேயே நல்ல கல்வியைக் கற்றுக் கொடுத்து எதிர்காலத்திற்கு உகந்த நல்ல குடிமக்களை உருவாக்கித் தருகின்ற பணியினை மேற் கொண்டிருக்கிறது. பெருமைக்கு உரிய அந்தப் பணியை ஆற்றிய, ஆற்றி வருகிற, இனியும் எதிர்காலத்தில் ஆற்றப்போகிற அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைக் காணிக்கை யாக்கிக் கொள்கிறேன்.

"நாங்கள் இந்த நிறுவனங்களை நடத்துவதற்கு எவ்வளவோ பெரிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எங்களைத் தொடர்ந்து இந்தப் பணிகளைச் செய்ய இந்த நிறுவனத்தி லிருந்து படித்த மாணவர் எவரும் முன்வர வில்லையே! தனது எழுபத்தைந்தாவது நிறைவு விழாவினை இந்தக் கல்விநிறுவனம் கொண் டாடுகிறது. ஆனால் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடியவராக இதே நிறுவனத்தில் படித்த மாணவர் ஒருவர்கூட உருவாகவில்லையே!" என்ற கருத்துக்களை எனக்கு முன்பு இப்போது இங்கே பேசிய சுவாமி சர்வக்ஞானந்த அடிகளார் அவர்கள் குறிப் பிட்டார்கள். அவர்கள் அந்தக் கருத்துகளைக் கொஞ்சம் வேதனையோடேயே குறிப்பிட் டார்கள். அவர்கள் அவற்றைச் சொல்லும் போது, அவர்களுக்கு இருக்கும் மனவருத் தத்தை நானும் உணர்ந்தேன்.

மயிலாப்பூரில் இயங்கி வரும் இந்த இராம கிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு, இது போன்ற காரியங்களைச் செய்வதற்கு, தகுந்தவர்கள் உருவாகவில்லையே என்பதில் சுவாமி சர்வக் ஞானந்தருக்கு ஏக்கம் இருக்கிறது என்பதை என்னால் உணர முடிந்தது.

ஆனால் இங்கே நான் பணிவோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

சுவாமி சர்வக்ஞானந்தரைப் போன்றவர்கள் துறவியராக இருந்து பல அரிய வேலைகளை, பணிகளை, கடமைகளைச் செய்து வருகிறார்கள். அவர்களைப்போல இந்த மாணவர் இல்லத்திலே பயின்ற மாணவர்கள் அவ்வளவு பேரும் துறவி யராக மாறி சர்வக்ஞானந்த அடிகளார் குறிப்பிட்ட பணிகளைச் செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால் இந்த மாணவர் இல்லத்திலே படித்த மாணவர்களிலே ஒரு சிலரை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்விதம் சில மாணவர்களைப் பற்றி நாம் நினைத்துப் பார்ப்போமேயானால், சர்வக்ஞா னந்த அடிகளார் அவர்கள் நிச்சயம் பெருமைப் படுவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

இந்த மாணவர் இல்லத்தில் பயின்ற மகா தேவன் அவர்கள், இந்திய ராணுவத்திலே மேஜர் ஜெனரலாகப் பதவி வகித்தார். இப் போது அவர் சர்விஸ் கமிஷனின் சேர்மனாக இருந்து வருகிறார். அவர் இந்த மாணவர் இல்லத்தில் படித்துவிட்டுச் சென்று தம் குடும்பத்திற்குப் பணம் சேர்ப்பதற்கென்று வாழாமல், நம் நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் தியாகமும் திறமையும் மிக்க ஓர் இராணுவ தளபதியாக விளங்கினார். இந்த நாட்டின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டால் தான், இந்தியக் குடிமக்களாகிய நாம் ஒவ்வொரு வரும் நமக்கென்று அமைந்த பணிகளைச் செம்மை யாக, அமைதியாக, நிம்மதியான சூழ்நிலையில் நிறைவேற்ற முடியும் என்பதற்கு நான் உதாரணம் தர வேண்டிய அவசியமில்லை.

மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்கள் நம் நாட்டின் சுதந்திரம் ஒன்றையே உயிர்மூச்சாக எண்ணி அதற்காகவே பாடுபட்டார். அது மட்டுமல்ல, எல்லா விதத்திலும் ஒழுக்கச் சீல ராக அவர் இருந்திருக்கிறார் என்பதிலே நாம் எல்லோருமே பெருமையும் பூரிப்பும் கொள் கிறோம். "அப்படியானால் இராணுவத்திலே இருக்கின்றவர்கள் ஒழுக்கச்சீலராக இல்லையா?" என்று நாளைய தினமே பத்திரிகைகளில் கேள்வி

எழலாம். "இராணுவத்தில் உள்ளவர்களை எல்லாம் எம். ஜி. ஆர். அவமானப்படுத்திப்பேசி விட்டார்" என்றுகூடப் பத்திரிகையில் செய்தி யாகப் போட்டுவிடுவார்கள். ஆனுல் ஒன்று சொல்கிறேன்: சிகரெட், பீடி, மது, மாமிசம் அருந்தாமல் இராணுவத்தில் இருப்பவர்கள் மிகவும் அரிது. எனவேதான் சிகரெட், பீடி, மது, மாமிசம் அருந்தாத மகாதேவனை ஒழுக்கச் சீலர் என்று குறிப்பிட்டேன்.

சுற்றிலும் பனிக்கட்டிகளே நிறைந்த நிலையில், குளிர் தாங்கமாட்டாமல் உடல் விறைத்துப் போகிற சூழ்நிலையில். இராணுவவீரர்கள் பணியாற்ற வேண்டியுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் உடலை ஒழுங்குபடுத்திக்கொள்ள வும் துணிச்சலை ஏற்படுத்திக்கொள்ளவும் மது, மாமிசம், பீடி, சிகரெட் இவையெல்லாம்தான் உதவ வேண்டும் என்ற நம்பிக்கையும், அவற்றைப் பயன்படுத்துவதும் தவறல்ல, அவை தேவையானவையே என்ற சுற்றுச் சார்பிலும் மகாதேவன் இராணுவத்தில் பணி புரிந் துள்ளார். எனினும் அவர் 'அவற்றையெல்லாம் பயன்படுத்தாமலேயே இராணுவத்தில் நான் வாழ்ந்து காட்ட முடியும், என் கடமையைச் செய்ய முடியும், பதக்கங்களையும் விரப்பட்டயங் களையும் பெற முடியும், சாதாரணச் சிப்பாயாக இருந்து மேஜர் ஜெனரலாக இருக்கின்ற தகுதியை நான் வெளிக்காட்ட முடியும்' என் றெல்லாம் நிருபித்துவிட்டார். இதைச் செய் தவர் யார் என்ற கேள்விக்கு நமக்குக் கிடைக் கின்ற பதில், இந்த இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்திலே பயின்ற ஒரு மாணவர் என்பதாக இருக்கிறது.

இவ்விதம் இருக்கும்போது இதைவிட ஒரு கடமை உணர்வு, இதைவிட ஒரு பெருமை, நாட்டுக்குத் தொண்டு செய்கின்ற பெரும்பேறு வாய்ப்பது அரிது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேஜர் ஜெனரல் மகாதேவன் அவர்களைப் போல இந்த மாணவர் இல்லத்திலே பயின்ற மற்ெருருவரையும் நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

சுப்ரீம் கோர்ட் எனப்படும் உச்ச நீதிமன்றத் தில் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள எனது வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரிய உயர்திரு பி. எஸ். கைலாசம் அவர்கள் இதே மாணவர் இல்லத்தில் கல்வி பயின்றவர். அவர்கள் இந்தப் பள்ளியிலே படித்து நீதி மன்றத்தில் இருந்து நீதியைத் தந்தார்கள். டில்லி மாநகர் சென்று நீதிபதியாக இருந்து பணி புரிந்தார்கள்.

அரிய பல ஆன்மிக நூல்களைத் தமிழில் தந் திருக்கும் மதிப்பிற்குரிய 'அண்ணு' சுப்ர மண்யம் ஐயர் அவர்கள் இதே மாணவர் இல்லத்தில் கல்வி கற்ற மாணவரே ஆவார். ரிசர்வ் பாங்கின் கவர்னராக இருந்த ஜனர்த் தனம் அவர்கள் இந்த மாணவர் இல்லத்தில் படித்தவர்தாம். ரூபாய் நோட்டுக்களில், 'கவர்னர்' என்ற இடத்தில் 'ஜனர்த்தனம்' என்ற அவரது கையெழுத்தை உங்களிலே பலரும் கவனித்திருக்கக் கூடும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறையின் தலைவ ராக இருந்த பேராசிரியர் டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்களும் இந்த மாணவர் இல்லத்திலே படித்தவர். அவர் தத்துவத் துறையில் ஆற்றிய தொண்டு மகத்தானது என்பது ஒருபோதும் மிகையாகாது. தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்தின் ஆணையராக இருந்த எம். கே. பாலசுப்ரமண்யம் ஐ. ஏ. எஸ். அவர்களும் இந்த மாணவர் இல்லத்தின் பழைய மாணவரே ஆவர்.

இந்த மாணவர் இல்லத்தால் பலர் உருவாக் கப்பட்டிருக்கிருர்கள் என்பதை விளக்குவதற்கு, நினைவுபடுத்திக் கொள்வதற்கு ஒரு சிலரை மட்டும் நான் இங்கே உதாரணமாகக் குறிப் பிட்டேன்.

இந்த மாணவர் இல்லத்திலே கல்வி பெற்ற பலரும் பல வேறு துறைகளில் நாட்டிற்குத் தொண்டாற்றினுர்கள், இப்போதும் தொண் டாற்றி வருகிருர்கள் என்பதைத் துறவியர் களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படிச் சொல்லும்போது, இந்த ரீதியில் நினைத்துப் பார்க்கும்போது — துறவிகளாகிய உங்களுடைய ஏக்கம் இப்போது தீர்ந்திருக்கும், இப்போது உங்களுக்கு ஏக்கம் இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இப்படி நல்லவர்களைத் தந்த நல்லதொரு நிறுவனமாக இராமகிருஷ்ண மிஷனின் இந்த மாணவர் இல்லம் இருப்பது, எனக்கும் பொரு

மையாகத்தான் இருக்கிறது. சிறுவயதில் நான் இங்கே படிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந் திருப்பேனேயானால் இதையே நானும் பெரு மிதத்தோடு சொல்லியிருப்பேன். அதாவது 'இந்தத் தமிழ்நாட்டின் முதல்வர் இங்கே இந்த மாணவர் இல்லத்தில் படித்து வந்தவன்' என்றே நானும் சொல்லியிருப்பேன். (மக்கள் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.)

ஆனால் அப்படிச் சொல்லிக்கொள்ள முடியா விட்டாலும், ஒன்றை நான் திட்டவட்டமாகச் சொல்வேன். என் இளம் வயதில் விவேகானந்த ருடைய சொற்பொழிவுகளையும் அவர்களுடைய கருத்துக்களையும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச ருடைய அருங் கருத்துக்களையும் நான் படித் திருக்கிறேன். அவ்விதம் நான் படிக்க நேர்ந்த அவர்களின் கருத்துக்களை ஓரளவுக்கு மனப் பாடம் செய்து வைத்துக்கொள்ளும் திறமை யையும் பெற்றிருந்தேன். ஆர்வத்துடன் அந் நாளில் நான் படிக்க நேர்ந்த அவர்களது கருத்துக்களில் சில இப்போதும் என் நினைவில் இருந்து என்னை வழிநடத்துகின்றன என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை இங்கு நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இங்கே இப்போது குழந்தைகளுக்குப் புத்தகங்கள் கொடுத்தார்கள். அவற்றில் ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். அந்தப் புத்த கத்தின் பெயர் 'குருதேவர் வாக்கியம்' என்று நினைக்கிறேன். அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தபோது அதில் இராமகிருஷ்ண பரம ஹம்சருடைய திருவுருவப்படம் இருந்தது. அந்தப் புத்தகத்தில் ஓர் இடத்தில் இராம கிருஷ்ண பரமஹம்சர் சொல்வதாக ஒரு கருத்து வருகிறது. அதை உங்களுக்கு இங்கே சொல்ல லாம் என்று நினைக்கிறேன்.

"முன்னொரு காலத்தில் ஓர் அவதூத சன்னி யாசி இருந்தார். அவர் ஒருவரோடும் பேசாமல் மெய்மறந்த பரவசநிலையில் இருந்து வந்தார். அவரை எல்லோரும் பித்தர் என்று எண்ணி னார்கள். ஒரு நாள் அவர் ஒரு கிராமத்தில் பிக்ஷையெடுத்து வந்து, அங்கிருந்த ஒரு நாயுடன் கூட உட்கார்ந்து உண்ண ஆரம்பித் தார். இந்த ஆச்சரியத்தைக் கண்டு பலர் அங்குத் திரளாகக் கூடினர். அந்தப் பெரியார் ஒரு கவளம் உணவை நாய்க்கு ஊட்டுவார்; மற்றொரு கவளத்தைத் தாம் உண்ணுவார். இவ்வாறாக இருவரும் நண்பர்களைப் போன்று ஒன்றாக அமர்ந்து உணவருந்த ஆரம்பித்தனர். அந்த ஞானியின் செயலைப் பார்த்த மக்கள், 'இதோ, ஒரு பைத்தியம்!' என்று சொல்லிக் கைகொட்டிச் சிரித்தனர். அவ்விதம் அவர்கள் சிரிப்பதைக் கண்ட அந்த ஞானி, 'ஏன் சிரிக் கிறீர்கள்? நாராயணன், நாராயணனுடன் உட்கார்ந்து நாராயணனுக்கு ஊட்டுவதைக் கண்டு நாராயணனே சிரிப்பதேன்? உள்ள தெல்லாம் நாராயணமயம் அன்றோ?' என்று சொன்னார்" என்று சொல்லி முடிக்கிறார் இராமகிருஷ்ணர்.

எல்லா இடத்திலும் கடவுள் உண்டு, எல் லோர் உள்ளத்திலும் கடவுள் உண்டு, எல்லோ ரும் கடவுள்தான், உலக உயிர் அனைத்தும் கடவுள்தான் — என்ற உண்மையை இராம கிருஷ்ண பரமஹம்சர் அவர்கள் தமது அந்த வாக்கியத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இப்படி எத்தனை எத்தனையோ விஷயங்களைத் தந்த இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகி யோர் கண்ட கொள்கைகளின் அடிப்படையில் இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறு வனத்திற்குக் கிடைக்கும் பெருமைக்கும் பாராட்டுதல்களுக்கும் இராமகிருஷ்ண பரம ஹம்சரின் திருவருள்தான் காரணம் என்று இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் கூறுவார்கள். அதுதான் உண்மை என்று நானும் கருதுகிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் இந்தக் குழந்தை களையெல்லாம் வளர்த்து இந்த நிறுவனம் விவேகானந்தர்களாக, ராஜாஜிகளாக வழங்க வேண்டும்.

குருதேவர் வாக்கியம், நமது தாய்நாடு, இந்தியப் பெண்மணிகள், எதிர்கால இந்தியா, விவேகானந்தரின் அறிவுரைகள் என்ற வகையில் அமைந்த இப்படிப்பட்ட புத்தகங்களை இங்கே இப்போது குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட நூல்களைப் படித்தும் இந்த நிறு வனம் தருகின்ற பயிற்சிகளைப் பெற்றும் எதிர் காலத்தில் குடிமக்களாக விளங்கப்போகிற வர்கள், நல்ல குடிமக்களாக விளங்குவார்கள்;

தவறான வழி என்றாலே இன்னது என்று அறியாதவர்களாக, நல்லவர்களாக இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இப்படிப் பட்ட மாணவர் இல்லம் போன்ற நிறுவனங்களை இந்தியாவின் பல பாகங்களிலும் நடத்தி வரும் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த பெரியோர்களை எப்படிப் பாராட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை.

குருகுலம் போன்ற இத்தகைய பள்ளிகள் இந்த நாட்டில் பெருவாரியாகப் பல்கிப் பெருக வேண்டும் என்ற என் ஆசையை ஏக்கத்தோடு வெளிப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

75 ஆண்டுகள் அல்ல; 7,500 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த இல்லம் இப்போது இருப்பதை விடவும் பெரும் புகழோடும் பெருமையோடும், நாட்டின் பண்பாடுகளை எல்லாம் காப்பாற்றுகின்ற ஓர் ஆலமரத்தின் ஆணிவேராக இருந்து கொண்டிருக்க வேண்டும். இந்த ஆலமரத்தில் விழுகின்ற விழுதுகள் பல ஆலமரங்களுக்கு அடிப்படையான ஆணிவேராக அமைந்து அவைகளும் ஆலமரங்களாக உருவாக வேண்டும். அந்த ஆலமரங்களிலிருந்தும் இன்னும் விழுதுகள் தொடர்ந்து விழுந்தபடியே இருக்க வேண்டும் என்ற வகையில் இந்தக் கல்வி நிறுவனம் பெருக வேண்டும் என்ற என் வேண்டுகோளை உங்கள்முன் வைக்கிறேன்.

உங்களின் இந்தப் பணி வளரட்டும், வாழ்வாங்கு வாழட்டும், உங்களுடைய கடமை உணர்வு நாட்டிற்கு நன்மைகளைத் தரட்டும் என்று சொல்லி, இந்த வாய்ப்புத் தந்தமைக்காக நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

ஏமாற்றாதே



நபிகள்நாயகம் ஒரு சந்தைப் பக்கமாகப் போயிருந்தார். ஒரு மனிதன் தானியத்தைக் குவித்து வைத்திருந்தான். நபிகள்நாயகம் தானியக் குவியலுக்குள் கைகளை விட்டுத் துழாவிப் பார்த்தபோது தம் கைவிரல்கள் ஈரமாக இருப்பதைக் கண்டார். உடனே நபிகள்நாயகம், ''தானியக்காரனே! என்ன இது?'' என்று கேட்டார்.

''தீர்க்கதரிசி அவர்களே! தானியத்தில் மழை பெய்துவிட்டது'' என்றான் தானிய வியாபாரி.

''அப்படியானால் நீ ஏன் நனைந்த தானியத்தை மேலாகக் குவித்து வைக்கவில்லை? அப்படிச் செய்தால் எல்லோருக்கும் உண்மை தெரியும் அல்லவா? நம்மை ஏமாற்றுகிறவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களாக மாட்டார்கள்'' என்றார் நபிகள்நாயகம்.

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

நீங்கள் உடல் படைத்தது அற்பமான போகத்திற்காக அன்று, ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையில் நீங்கள் காணும் பக்தி, ஞானம், பேரின்பம், தெய்விகமான உபதேச மொழிகள் ஆகியவற்றை உலகில் பரப்புவதற்காகத்தான். உங்கள் வாழ்க்கை உலகிற்குச் சபதம் கூறுகிறது; அதை எதிர்த்து நிற்கிறது. வாழ்க்கையை மிகுந்த கவனத்துடன் நடத்துங்கள். 'இறைவா! என்னைக் காத்தருள்' என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்யுங்கள். சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகரிலிருந்து திரும்பியதும் மகாத்மாவும் பக்த வீரருமான சசிமகராஜ் (இராமகிருஷ்ணானந்தர்) அவரை நோக்கி, "தத்துவப் பிரசாரம் செய்பவன் எப்படி இருக்க வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு விவேகானந்தர், "முதல் முதலாக அவன் ஞானப்பிரகாசம் உடையவனாக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, அவருடைய முகத்தைத் தடவி, "குருகிருபை இருக்க வேண்டும்'' என்றும், அவருடைய உதடுகளைத் தொட்டு, "இனிமையான பேச்சுப் படைத்தவனாக இருக்கவேண்டும்'' என்றும், பிறகு அவருடைய மார்பைத் தொட்டு, "இதயமுள்ளவனாக இருக்கவேண்டும். இன்றேல் எவரும் வெறும் பேச்சை மதிக்கமாட்டார்கள். மூளையால் சாதிக்க முடியாததையும், அதற்கும் அப்பாற்பட்டதையும் நான் இதயத்தின் மூலம் சாதித்தேன் நமது குருநாதரும் அப்படித்தான் செய்தார்'' என்று கூறிவிட்டு, "தன்னடக்கம் உடையவனாகவும் தன்னையே தான் வென்றவனாகவும் இருத்தல் தத்துவ போதகனுக்கு முக்கியமான பலம்'' என்று முடித்தார்.

சாதுவே! ஜாக்கிரதை. பகவான் உனக்கு பலமளித்துக் காப்பாற்றட்டும் என்பது எனது பிரார்த்தனை.

உலகில் சுயநல வேட்டை நிறைந்திருக்கிறது என்பது நிச்சயம். நாம் அந்த உலகில் வாழ வேண்டியிருந்தாலும் அந்த வகையில் ஒத்துழைக்க இயலாது. அதையெல்லாம் நன்கு யோசித்துப் பார்த்துப் பணிபுரிய ஆரம்பிக்க வேண்டும். உலகம் சுயநலம் நிறைந்ததாக இருந்தாலும் நாம் சுயநலப் பற்றற்றவர்களாக இருந்துகொண்டு பற்றுள்ளவர்களின் மத்தியில் பணியாற்ற வேண்டும்.

சுயநலத்தில் நாட்டமில்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. உலகம் உள்ளவரையில் சுயநல பற்றுப் இருந்தே தீரும். அதற்கு யாரையும் குறை கூற வேண்டாம். இறைவனே உலகை அப்படிச் சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய மக்களை அப்படி அது ஆட்டி வைக்கிறது. எது முக்கியம் என்றால் நாம் அதில் அகப்பட்டுக் கொள்ளாமல் பற்றற்று இருப்பதே ஆகும்.

முதலில் நம்முடைய குற்றங் குறைகளையே நாம் காணவேண்டும்; பிறருடைய குற்றங்களை அல்ல. குழந்தைகளைப் பெற்றவர்கள் நலமுடையவர்களாகத்தான் இருப்பார்கள். வாழ்நாள் முழுதும் அப்படி இருந்து விட்டவர்களிடம் அதற்கு மீறின ஒன்றை நாம் எதிர்பார்க்கக் கூடாது. அவர்களின் சுயநலப் பற்றைக் கண்டு, குறை கூறாமலும் மரியாதைக் குறைவாக நடவாமலும் இருக்க வேண்டியது புத்திரர்கள் கடமை. நாம் அப்படி நடவாவிட்டால் நாம் சுயநலமற்றவர்கள் என்று எப்படி நம்மைக் கருத முடியும்? ஒருவன் சுயநலப் பற்று உடையவனாக இருந்தாலும் அது என்னையும் அப்படிச் செய்து அவனிடம் மரியாதையில்லாதவனாக்கிவிடக் கூடாது. கருத்து என்னவென்றால் உலகத்தின் சுயநலத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டு நம்மிடம் அதின் நிழல்கூட இல்லாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதேயாகும் இதை மனதில் இருத்திக் கொண்டால் நம்மை எவரும் நேர் வழியிலிருந்து விலக்கிவிட இயலாது.

ஆன்ம வாழ்க்கையில் முழு மனதுடன் உழைத்து முன்னேறு. வழியில் வரும் தடைகளையும் இன்னல்களையும் பொருட்படுத்தாமல் மேலே செல்லக் கூடிய வல்லமையுள்ளதாக உன் மனதை ஆக்கிக்கொள். உள்ளத்தில் பலமும் ஊக்கமும் சக்தியும் நிறைந்திருக்க பகவானிடம் பிரார்த்தனை செய். உழைப்பின் சக்தியாகிய ராஜஸ குணம் இல்லாமல் ஒன்றையும் சாதிக்க இயலாது. உள்ளத்தில் ராஜஸமில்லாமல் ஸத்துவம் தொடராது. ஸத்துவம், அதாவது தூய்மை இல்லாவிட்டால், அந்த உள்ளத்தில் இறைவனுடைய சாந்நித்தியம் விளங்காது. உன்னிடத்திலேயே உனக்கு நம்பிக்கை வேண்டும். 'நான் தெய்வத்தின் குழந்தை. சுயநலம் போன்ற தீய குணங்கள் என்னை அணுக இயலாது' என்று எண்ணிக்கொள். தீமை ஒரு வேளை அணுகினால் விழிப்புடன் இருந்து அதைத் துரத்து. பகவானிடம் மனதையும் இதயத்தையும் அர்ப்பணம் செய்து கடமைகளைச் செய்து வா. நாளடைவில் அவர் அனைத்தையும் உனக்குச் சீராக்கிவிடுவார். நீ நேர்மையுடன் இருந்தால் எல்லாம் நன்றாக முடியும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஏதாவதொரு பாவனையில் மனதை நிறுத்தி, ஆழ்ந்து தியானம் செய்து அதன் தத்துவத்தைப் புரிந்து கொண்டு அதை உன் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கச் செய். ●

ஒருவன் யோகியைப் பார்த்து, "உலகம் தூற்றும்படியான இந்தப் பக்தனைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அவர், "மேற்பார்வையில் குற்றத்தைக் காண்பதற்கில்லை. உள்ளத்தில் அடைத்து வைத்திருப்பதை நான் அறியேன். தர்மகாரியத்தில் முனைந்து நிற்பவர்களைக் காணும் பொழுதெல்லாம், அவர்களுடைய அந்தரங்கத்தை அறியாத வரையில், உண்மையானவர்கள் என்றே வைத்துக்கொள்ளுங்கள். நீதிபதிக்கு, வீட்டிற்குள் நுழைந்து காண வேண்டிய அவசியம் என்ன?" என்று பதிலளித்தார்.

—பாரசீக அறிஞர் ஸாஅதி

பெரும் நஷ்டத்தையடைந்த வியாபாரி தன் பிள்ளையிடம் அதை எவரிடமும் தெரிவிக்காமல் இருக்கும்படி உத்தரவிட்டான்.

மகன் சரியென்று கூறிவிட்டு, காரணம் கேட்க, தகப்பன் சொன்னதாவது :—

"பணம் நஷ்டமானது போக, பகையாளிகளின் தூற்றலுக்கும் ஆளாகக் கூடாது."

"விரோதிகளிடம் உன் துக்கங்களையும் துன்பங்களையும் வெளியிடாதே."

"ஏனெனில், வெளிப்படையாகவே உன்னிடம் அனுதாபம் காட்டினபோதிலும், அந்தரங்கத்தில் உன் விரோதிகள் சந்தோஷப்படுவார்கள்."



—ஸாஅதி

சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின்

விசேஷ தினங்கள் 1981 — 82

ஏப்ரல் 1981

திங்கள் 13	தமிழ்ப் புத்தாண்டு
செவ்வாய் 14	ஏகாதசி
வியாழன் 30	ஏகாதசி

மே 1981

புதன் 6	அக்ஷய திருதீயை
வெள்ளி 8	ஸ்ரீசங்கரர் & ஸ்ரீராமானுஜர் ஜயந்திகள்
ஞாயிறு 10	ஸ்ரீசங்கரர் & ஸ்ரீராமானுஜர் ஜயந்தி விழா பொதுக்கூட்டம்
வியாழன் 14	ஏகாதசி
திங்கள் 18	ஸ்ரீ புத்த ஜயந்தி
ஞாயிறு 24	ஸ்ரீ புத்த ஜயந்தி பொதுக்கூட்டம்
வெள்ளி 29	ஏகாதசி

ஜூன் 1981

திங்கள் 1	ஸ்ரீஸ்ரீ பலகாரிணி காளி பூஜை
சனி 13	ஏகாதசி
புதன் 17	ஸ்நான பூர்ணிமா
ஞாயிறு 28	ஏகாதசி

ஜூலை 1981

ஞாயிறு 12	ஏகாதசி
வெள்ளி 17	குரு பூர்ணிமா
திங்கள் 27	ஏகாதசி
புதன் 29	சுவாமி இராமகிருஷ்ணானந்த ஜயந்தி

ஆகஸ்ட் 1981

ஞாயிறு 2	சுவாமி இராமகிருஷ்ணானந்த ஜயந்தி பொதுக்கூட்டம்
செவ்வாய் 11	ஏகாதசி
சனி 15	சுவாமி நிரஞ்ஜனானந்த ஜயந்தி
ஞாயிறு 23	ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி
செவ்வாய் 25	ஏகாதசி
வெள்ளி 28	சுவாமி அத்வைதானந்த ஜயந்தி
ஞாயிறு 30	ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி பொதுக்கூட்டம்

செப்டம்பர் 1981

புதன் 2	விநாயக சதுர்த்தி
வியாழன் 10	ஏகாதசி
வெள்ளி 11	ஓணம்

செவ்வாய் 22	சுவாமி அபேதானந்த ஜயந்தி
வியாழன் 24	ஏகாதசி
ஞாயிறு 27	மகாளய அமாவாசை
திங்கள் 28	சுவாமி அகண்டானந்த ஜயந்தி
செவ்வாய் 29	நவராத்திரி ஆரம்பம்

அக்டோபர் 1981

ஞாயிறு 4	ஸ்ரீஸ்ரீ துர்க்கா பூஜை (ஷஷ்டி)
திங்கள் 5	மகாசப்தமி
செவ்வாய் 6	மகாஷ்டமி (சாந்தி பூஜை 1-44 to 2-32 A.M.-7ஆம் தேதி விடியற் காலை)
புதன் 7	மகாநவமி
வியாழன் 8	விஜயதசமி (மாலை வழிபாட்டிற்குப் பிறகு 'சாந்தி ஜலம்' தெளித்தல்)
வெள்ளி 9	ஏகாதசி
செவ்வாய் 13	ஸ்ரீஸ்ரீ லக்ஷ்மி பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)
வெள்ளி 23	ஏகாதசி
செவ்வாய் 27	ஸ்ரீஸ்ரீ காளிபூஜை & தீபாவளி (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

நவம்பர் 1981

ஞாயிறு 8	ஏகாதசி
திங்கள் 9	சுவாமி சுபோதானந்த ஜயந்தி
புதன் 11	சுவாமி விஞ்ஞானானந்த ஜயந்தி
ஞாயிறு 22	ஏகாதசி

டிசம்பர் 1981

ஞாயிறு 6	சுவாமி பிரேமானந்த ஜயந்தி
திங்கள் 7	ஏகாதசி
வியாழன் 17	தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியார் ஜயந்தி விழா
ஞாயிறு 20	தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியார் ஜயந்தி விழா பொதுக்கூட்டம்
திங்கள் 21	சுவாமி சிவானந்த ஜயந்தி & ஏகாதசி (மாலை வழிபாட்டிற்கு முன்பு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம்)
வியாழன் 24	கிறிஸ்மஸ் ஈவ் (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

ஜனவரி 1982

வெள்ளி 1	சுவாமி சாரதானந்த ஜயந்தி & கல்பதரு திருநாள்
புதன் 6	ஸ்ரீவைகுண்ட ஏகாதசி
வெள்ளி 8	சுவாமி துரியானந்த ஜயந்தி
சனி 9	சந்திரக்கிரகணம் (இரவு 11 மணி 43 நிமிடம் 36 விநாடி முதல் விடியற்காலை 3 மணி 8 நிமிடம் 6 விநாடி வரை)
வியாழன் 14	பொங்கல் — மகர சங்கராந்தி
சனி 16	சுவாமி விவேகானந்த ஜயந்தி
ஞாயிறு 17	சுவாமி விவேகானந்த ஜயந்தி பொதுக்கூட்டம்
புதன் 20	ஏகாதசி
புதன் 27	சுவாமி பிரம்மானந்த ஜயந்தி (மாலை வழிபாட்டிற்கு முன்பு ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம்)
வெள்ளி 29	சுவாமி திரிகுணாதீதானந்த ஜயந்தி
சனி 30	ஸ்ரீஸ்ரீ சரஸ்வதி பூஜை & வசந்த பஞ்சமி

பிப்ரவரி 1982

வியாழன் 4	ஏகாதசி
திங்கள் 8	சுவாமி அத்புதானந்த ஜயந்தி
வெள்ளி 19	ஏகாதசி
திங்கள் 22	மகாசிவராத்திரி
வியாழன் 25	பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி
வெள்ளி 26, சனி 27, ஞாயிறு 28	பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியின் சிறப்பு விழா நிகழ்ச்சிகள் & பொதுக்கூட்டங்கள்

மார்ச் 1982

சனி 6	ஏகாதசி
செவ்வாய் 9	டோல் பூர்ணிமா — ஸ்ரீசைதன்ய ஜயந்தி
சனி 13	சுவாமி யோகானந்த ஜயந்தி
ஞாயிறு 14	ஸ்ரீ சைதன்ய ஜயந்தி பொதுக்கூட்டம்
ஞாயிறு 21	ஏகாதசி
வெள்ளி 26	யுகாதி

ஏப்ரல் 1982

வெள்ளி 2	ஸ்ரீராமநவமி
ஞாயிறு 4	ஸ்ரீராமநவமி பொதுக்கூட்டம் & ஏகாதசி

குறிப்பு :—

1. ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

2. ஜயந்தி என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பெரியோர்களின் பிறந்த நாட்களின்போது மாலை வழிபாட்டிற்குப் பிறகு அந்த அந்தப் பெரியோர்களின் வாழ்வு — வாக்குப் பற்றிய சொற்பொழிவுகள் நடைபெறும்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

காந்தியடிகளின் பொன்மொழிகள்

✻ கடவுள் தம் பக்தர்களை மேலும் மேலும் சோதனை செய்துகொண்டே இருக்கிறார். ஆனால் அவர் பொறுமையின் எல்லையை மீறி ஒருபோதும் சோதனை செய்வது கிடையாது. தம் பக்தர்களைத் தாம் சோதிக்கும்போது, அந்தச் சோதனையைத் தாங்கக் கூடிய சக்தியையும் கடவுள் அவர்களுக்குக் கொடுக்கிறார்.

✻ வணக்கம் அல்லது பிரார்த்தனை உதடுகளால் நிறைவேற்றக் கூடிய காரியம் அல்ல; அது உள்ளத்தினால் நிறைவேற்றக் கூடிய காரியம் ஆகும். அதனால்தான் ஊமைகளும் திக்குவாய் உள்ளவர்களும், அறியாமையும் மூடத்தனம் உள்ளவர்களும்கூட பிறரைப் போலவே பிரார்த்தனை செய்யமுடியும். உள்ளம் நஞ்சாகவும் நாக்கு தேனாகவும் உள்ளவர்கள் செய்யக்கூடிய பிரார்த்தனை கடவுளின் செவிகளைத் தீண்டாது.



பொன்மொழிகள்

✻ ஒரு குடும்பத்தில் தப்புப் பண்ணும் குழந்தையைத் தகப்பன் அடிக்கும் போது, குழந்தை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நினைப்பதில்லை. மகன் தந்தைக்குக் கீழ்ப்படியவே செய்கிறான். ஏன்? அடிபட்டதனால் அன்று, அடியின் பின்னணியில் உள்ள அன்பு காரணமாகத்தான். சமுதாயம் எப்படி ஆளப்பட வேண்டும் என்பதற்கு இதுவே உதாரணமாக இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். குடும்பத்துக்கு எது உண்மையோ அதுவே சமுதாயத்துக்கும் உண்மையாக இருக்கவேண்டும். சமுதாயம் என்பது பெரிய குடும்பமே ஒழிய வேறில்லை.